விலை 20/=

ISSN-2613-828X

# யாழ் களரி

www.yarlgallery.com
yarlgallery@gmail.com

உதயம்: 01 | கார்த்திகை - மார்கழி 2018 | களரி: 11



# யார் பொறுப்பு?




நீ உருவாகி பிறரை உருவாக்கு

# அரசியல் கைதிகளை விடுவிப்பது குறித்து மகிந்த முடிவெடுத்தால் அதற்கான எதிர்ப்பலை இருக்காது



30 வருடகாலப் போரை முடிவுக்குக் கொண்டு வந்த பெருமை சிங்கள மக்கள் மத்தியில் மகிந்தவுக்கே உண்டு. பௌத்த பீடங்கள் மட்டுமல்லாது கூலித்தொழில் செய்யும் சாதாரண சிங்களவர்கள் கூட மகிந்த ராஜபக்சவை எதிர்த்துக் கதைக்க மாட்டார்கள். மகிந்த ஆட்சிக்க காலத்திலேயே பெரும்பாலானோர்கள் கைது செய்யப் பட்டார்கள். அவர்களை விடுவிக்கும் தார்மீகப் பொறுப்பும் மகிந்தவுக்கே உண்டு. மகிந்த அவ்வாறான தீர்மானம் ஒன்றை எடுக்கும்போது இது விடயத்தில் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடிய சிங்களக்கட்சிகள் பல மகிந்த அணிக்குள் இருப்பதால் அவர்களில் எதிர்ப்பு வலுவிழக்கவும் வாய்ப்புகள் அதிகமாகவே காணப்படுகிறது.

வாசுதேவ நாணயக்கார கைதிகளின் விடுதலை தொடர்பில் நாடாளுமன்றம் பிரேரணை ஒன்றை முன்வைக்க இருப்பதாக வெளிப்படையாக அறிவித்திருந்தார்.

இந்தநிலையில் முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவை தற்போதைய அரசதலைவர் தலைமை அமைச்சராக்கியதன் பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவை மகிந்த அணி கோரி நின்றபோது இந்தக் கைதிகள் விடயத்தை முன்னிறுத்தித் தமிழ்தேசியக் கூட்டமைப்பு நகர்வுகளை ஏற்படுத்தியிருக்கக் கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக இருந்தன. அது கைநழுவிப் போய் விட்டது. வவுணதீவுப் பகுதியில் இரண்டு பொலிசார் கொல்லப்பட்டமை இந்த விடயத்திற்கும், விடுதலைப்புலிகளின் போராளிகளுக்கும் என்பதாக கதைகள் பரவியமை விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டமையென எல்லாமே சிறைக்குள் இருக்கின்ற முன்னாள் போராளிகளுக்கும் இதுவரை மறுவாழ்வு அளிக்கப்பட்டுமகிந்த அரசால் விடுவிக்கப்பட்ட 12ஆயிரத்து 600 வரையான முன்னாள் போராளிகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் விடயமாக மாற்றப்பட்டுள்ளது.

வவுணதீவு பொலிசாரைக் கொன்று



விட்டு அந்த இருவரிடமும் இருந்த கைத்துப்பாக்கிகளை கொலையாளிகள் எடுத்துச் சென்றுள்ளனர் என்ற செய்தி மீண்டும் புலிகள் எழுந்து விட்டார்கள் என்று பரப்புரை செய்வதற்கு இனவாதிகளுக்குக் கிடைத்திருக்கும் துருப்புச்சீட்டாகும்.

நல்லாட்சியின்போது கிளிநொச்சியைச் சேர்ந்த அரசியல் கைதியான ஆனந்தசுதாகரனின் மனைவி இறந்திருந்தார். அந்தச் சாவு வீட்டுக்கு ஆனந்தசுதாகரன் சிறைச்சாலை அதிகாரிகளால் கொண்டு வரப்பட்டிருந்தார். மனைவியின் இறுதிக்கிரியைகள் முடிந்ததும் மீண்டும் ஆனந்தசுதாகரனை சிறைச்சாலை ஊழியர்கள் மீண்டும் சிறைக்கு அழைத்துச் செல்லும் காட்சியில் ஆனந்தசுதாகரனின் மகள் தந்தையுடன் சிறை பஸ்ஸிற்குள் ஏற முற்பட்டாள். இந்த நெகிழ்ச்சியான சம்பவத்தின் பின் ஆனந்த சுதாகரனை விடுவிப்பதாகக் கூறப்பட்டபோதும் இன்றுவரை அது நடைபெறவில்லை. சிங்களத் தேசிய வாதிகளுக்கு எதிராக நின்று தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கு ஏற்றவராக மகிந்தவையே அவதானிகள் நோக்குகின்றார்கள். இனிவரும் காலங்களில் தமிழர்களுக்கு என்ன நடக்கப்போகின்றது என்பதை அரசியல் கைதிகள் விடயம் குறித்த பேரினவாதத்தின் அணுகுமுறை கோடிட்டுக் காட்டுகின்றது.

# தொண்டமனாறு வீதி வெள்ளக்காடானது




அச்சுவேலிச் சந்தியிலிருந்து தம்பாலை ஊடாக தொண்டைமானாறு செல்லும் செல்வச்சந்நிதி பின்வீதி வெள்ளத்தால் மூடப்பட்டுள்ளது. இந்த வீதியை சீரமைத்துத் தருமாறு கோரியபோதும் தமது திட்டத்துக்குள் உள்வாங்கப்படவில்லையென வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்ததாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். வெள்ளம் மேவியுள்ளதால் தொண்டைமானாறு வீதி போக்குவரத்துச் செய்ய முடியாதிருப்பதைக் காணமுடிகிறது.

# தேசியவிருதுகளைப் பெற்றது “மனச்சாட்சியின் வழியில்” நாடகம்

உயர்கல்வி மற்றும் கலாசார அமைச்சினால் கலாசார மத்திய நிலையங்களுக்கிடையிலான "பிரதீபா" நாடகப்போட்டியில் சண்டிலிப்பாய் கலாசார மத்திய நிலையத்தின்கீழ் செயற்படும் இளவாலை கிராமியசபை நாடகமாணவர்களால் நடிக்கப்பட்ட **"மனச்சாட்சியின்வழியில்"** எனும் நாடகம் 11 தேசிய விருதுகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்று கொண்டது. மேற்படி நாடகத்தை செபஸ்ரி றெபின்சன் எழுதி நெறியாக்கம் செய்திருந்தமை. குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கு யாழ்களரியின் பாராட்டுக்கள்





# நம்பிக்கை வீண்போகுமா?

இன்று பலரும் ரீ.வியில் நாடகம் பார்ப்பதை பெண்கள் தவிர்த்து நம்மை பாராளுமன்ற நகைச்சுவை நாடகம் பார்ப்பதில் அதிக ஆர்வம் கொண்டு வருகின்றார்கள். வீட்டில் பெண்கள் அரசியலைக் கற்றுக் கொள்ள எமது நாடாளுமன்ற நிகழ்வு பலரை செய்தி பார்க்க ஆர்வமூட்டியதில் வெற்றிதான். எது ஆட்சி? எந்தக் கட்சி? ஏன் அடிபடுகிறார்கள்? இவர்களையா நாம் நாடாளுமன்றம் அனுப்பினோமென பெரும்பான்மை சமூகமே வெட்கித் தலைகுனிகிறது. இருந்தாலும் அடுத்த தேர்தலிலும் நாம் வெல்லலாம் என்ற நம்பிக்கை இந்தச் சண்டித்தன பாராளுமன்றத் தலைவர்கள் மூலம் உறுப்பினர்களுக்கு நம்பிக்கை உண்டு.

நல்ல கட்சி தலைவர்கள், நல்ல சண்டித்தனத்திலும், லஞ்சப் பணத்திலும் வெற்றி பெறலாம் என்ற நம்பிக்கைதான் காரணமாகலாம். மக்கள் எல்லாம் மறந்து விடுவார்கள். மற்றவர்களின் குறைகளை வக்கிரமாக குதர்க்கமாக கேலியாகக் கூறி தமது குறைகளை மறைத்து விட புதுப்புதுக் கட்சிகளாகத் தொடங்கி மக்கள் மனதை மாற்றி விடலாம் எல்லாம் மறந்தவர்கள் தானே எமது மக்கள் என்ற நம்பிக்கையில் அசையாத நம்பிக்கை உண்டு. எம் தலைவர்களுக்கும் அப்படித்தானே?


# நற்பணி சாதனையாளர் விருது"2019"

வடக்கு, கிழக்கைச் சேர்ந்த இளையோர் மற்றும் சமூகசேவை ஆர்வலர்களே!

உங்களை சாதனையாளர்களாக உருவாக்கி

**“வடக்கின் சாதனையாளர் நற் பணி விருது”**

**“கிழக்கின் சாதனையாளர் நற்பணி விருது”**

என்ற பிரிவுகளில் 10,000 ரூபா பணப்பரிசும், நினைவுக் கேடயமும், சான்றிதழும் வழங்கி மதிப்பளிக்கும் செயல்திட்டம்

**இந்தப் பலப்பரீட்சையில் பங்குபற்ற நீங்கள் தயாரா........**
**மேலதிக விபரங்களைப் பெற விண்ணப்பியுங்கள்**

**077-6510375**

**இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையம்**

28/1. ஏ.வி வீதி. கொழும்புத்துறை. யாழ்ப்பாணம்.

# யாழ் களரி

Website: yarlgallery.com E-Mail: yarlgallery@gmail.com
Tel/Whats App/Viber: 077 6510375
கார்த்திகை - மார்கழி





# சமூக மேம்பாட்டில் ஊடகங்களின் பங்களிப்பு மிகவும் பொறுப்பு வாய்ந்ததே !



யாழ்பல்கலைக்கழக அரசறிவியல்துறை தலைவர் கே.ரி.கணேசலிங்கம்

ஊடகங்கள் மக்களை வழிகாட்டி நல்ல அமைதியான சூழலை ஏற்படுத்துவதே அதன் பொறுப்பும் கடமையுமாகும். அந்த வகையில் ஊடகங்களால் உலகில் மக்களை உயிர் வாழ வைக்கவும் முடியும். உயிர் அழிவை ஏற்படுத்தவும் முடியும் என்பதனை உலகில் சிறந்த புகைப்படமாக திகழ்ந்த கெவின் காட்டரின் புகைப்படம் சூடானில் 1991ம் ஆண்டு வறுமையால் இறக்கும் தறுவாயில் இருந்த சிறுவனின் உடலை உண்ணக் காத்திருக்கும் கழுகை புகைப்படம் எடுப்பதற்காக பல நாள், பலமணி நேரம் காத்திருந்த புகைப்படத்திற்கு உலகின் சிறந்த புகைப்படமாக பரிசும், பாராட்டுக்களும் பெற்ற பத்திரிகை புகைப்படப்பிடிப்பாளர் கெவின் காட்டர் அவர்களின் மனச்சாட்சி உறுத்தியதால் இந்தச் சிறுவனின் உயிரைக் காப்பாற்ற முயலாது தன் புகழ்ச்சிக்காக அக்கணத்தைப் பயன்படுத்திய தவறிற்காக தன் உயிரையே மாய்த்த வரலாற்றுப் பதிவுக்கு ஆளாக்கினார். இது போலவே வியட்நாம் நாட்டில் நடந்த யுத்தத்தின்போது குண்டுத்தாக்குதலால் எரிகாயங்களுடன் ஆடையின்றி மக்கள் கூட்டத்தின் நடுவே ஓடி வந்த சிறுமியின் படத்தை எடுத்து பத்திரிகை புகைப்படக்கலைஞர் ஙேைட-ரவ சிறந்த உலகப் பரிசை 1973ல் தனதாக்கியதுடன் இந்தப் படத்தைப் பார்த்த போருக்குக் காரணமான

(தொடர்ச்சி பக்கம் 11)

# நம்பிக்கையூட்டும் இளைஞர் சக்தி தான் நம் இனத்துக்குத் தேவை



யாழ்.போதனாவைத்தியசாலை பணிப்பாளர் Dr.சத்தியமூர்த்தி

**வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவுவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்படி தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்**

இளைஞர்கள் மட்டில் உள்ள எதிர்பார்ப்புகள் ஏமாற்றமடைந்துவிட்டவோ என்ற எண்ணத்துக்கு தமது சிறந்த பணிகள் நம்பிக்கை ஊடாக இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் முயற்சிகள் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல வெளி மாவட்டங்களிலும், பொதுப்பணிகளிலும் கல்வி மேம்பாட்டிற்காகவும் ஆற்றிவரும் பணிகள் பாராட்டத்தக்கது. இன்று வருத்தப்படாத வாலிபர்சங்கத்தின் முயற்சிகளை வெளிநாடுகளிலும் பேசப்படுவது எமது மண்ணுக்கும், மக்களுக்கும் பெருமை சேர்க்கும் சிறந்த பங்களிப்பாகும். இவர்கள் ஐந்து வருட நிகழ்வை எதுவித இடையூறுமின்றி வளர்ச்சி காண்பது இச்சங்கத்தில் இணைந்துள்ள ஒவ்வொரு இளையோரின் அர்ப்பணிப்பும் ஒழுக்கக் கட்டுப்பாடு நிகழ்வுகளும் சான்றாக அமைகிறது.

இச்சங்கத்தில் முயற்சிகள் அயற்கிராமங்களிலும் பரவலாக முன்னெடுக்க வேண்டுமென எதிர்பார்த்து ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவில் வாழ்த்துத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன் என்றார் யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி சத்தியமூர்த்தி அவர்கள்.

இந்நிகழ்வு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் வாலிபத்தீபாவளி ஆகவும், சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவு விழாவாகவும் நடைபெற்றது.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கலாபூஷணம் செ.யோசப்பாலா, யாழ்சமூகசெயற்பாட்டு இணைப்பாளர் திரு.சுகிர்தராஜ், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் மணிசேகரன், இளவாலை புனிதஹென்றியரசர் கல்லூரி பிரதி அதிபர் திருமதி ம.சத்தியவாணி,

(தொடர்ச்சி பக்கம் 11)

## யாப்பிலும் பாரபட்சமா?

எமது நாட்டு அரசியல் யாப்பும் ....... சிங்களமொழி ஏற்றுக் கொள்ளவும் தமிழ்மொழியில் தெளிவில்லை என்பதும் முக்கிய நீதிநிர்வாகத்தின் மு ன் வெளியிடப்பட்டது. இதன் மூலம் தமிழில் வெளியிடப்படும் அரசியல் யாப்பு சட்ட வெளியீடுகள் யாரைத் திருப்திப்படுத்த வெளிவருகிறது. அரசு யாப்பே செல்லுபடியற்றதெனக் கூறுவதை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏன் மௌனித்து உள்ளார் என்பது தெரியவில்லை? அவர்கள் யாப்பில் என்ன எழுதப்படுகிறது என்பதனைப் படித்தால் தானே புரியும்.

தனுசன்

# காலங்கள் மாறும் காட்சிகள் மாறுமா?

"நந்தவனத்தில் ஓர் ஆண்டி அவன் நாலாறு மாதமாய் குயவனை வேண்டி கொண்டு வந்தானதை தோண்டி அதைக் கூத்தாடி கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி" இன்றைய அரசியல் நிலை சிறுபிள்ளைத்தனமானது போல எல்லோர் பல்லிளிப்புக்கும் பெரிய தலைமகன் என தம்மைத்தாமே காட்டிக்கொள்வோரின் இருப்பும் கலைந்தது. உலக அரங்கில் கேலிக்கூத்தாகத் தம்மை காட்டிக் கொண்டு கள்வரைக் கூண்டுக்குள் அடைப்போம் கொள்ளைப்பணங்களை அயல் நாட்டிலிருந்து மீட்பதே எமது குறிக்கோள் என்ற கோசத்துடன் தமிழன் அபிலாசைகளை நிறைவேற்றுவோம் என மேடைப் பேச்சுக்கள், நம்பிக்கை ஊட்டல்கள் புஸ்வாணமாகி இரு ஆட்சிகளும் வாய்ப்பேச்சில் வீரர்களாகவே உலாவந்தார்கள். புதிதாக இப்போ பேரம் பேசும் பேசுவோரின் வாக்குறுதிகளும் பத்திரிகை செய்தியோடு மறைந்து விடுவதாகவே உள்ளது. பேச்சு பல்லக்கு தம்பி கால்நடை என்பது போலவே மாற்றாந் தாய் மனப்பாங்கு பெரும்பான்மை தலைமைகளிடம். தமிழர் என்றால் அவர்களின் ஒற்றுமையைக் கலைத்து வீழ்த்துவதில் பெரும்பான்மையோர் ஒற்றுமையாகி விடுவார்கள். இதுவே எம் தமிழர் வரலாறாகி விட்டது. இவர்களைப் புனிதர்களாகக் கூறி தமது இருப்பைப் பலப்படுத்த முனையும் நம்மவர்கள் நாற்காலிகளைப் பாதுகாக்கப் புதுக்கதைகள் சொல்லியே தம்மிருப்பைத்

( தொடர்ச்சி பக்கம் 08)

# சமகால உளநிலை....

ரி.குமார்
உளவளத்துணை செயற்பாட்டாளர்

இயற்கையாகவே மனிதன் உடல், உள்ளம், ஆன்மா, பகுத்தறிவு ஆகிய அம்சங்களைக் கொண்டு இக்காலத்தில் உயிரினங்கள் மத்தியில் மேன்மையாக மனிதர் வாழ்க்கையை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு ஏதுவான சிறப்பைப் பெற்றுள்ளான். இருப்பினும் மனிதனின் ஆரோக்கியத்திற்கு அவனிடத்தில் அல்லது அவளிடத்தில் உடல்சார் சக உளசார் வளர்ச்சி அடைவுமட்டம் அவனது வயதிற்கேற'ப உளரீதியில் –உள்ளத்தின் மனப்பாங்கும், பக்குவநிலையும், உடல்ரீதியில் –உறுப்புக்களின் இயக்க வளர்ச்சியும், செயற்பாடுகளும் ஒருங்கிணைந்து ஏககாலத்தில் விருத்தியடைவதுடன் அவனுடைய ஆயுட்காலத்தில் தனிப்பட்ட வாழ்பனுபவங்களில் ஏற்படும் மாற்றங்களை மனித வளர்ச்சி என்கிறோம்.

மனித வளர்ச்சி பல நிலைகளை சிசுப்பருவம், குழந்தைப்பருவம், குமரப்பருவம், இளமைப்பருவம்,


( தொடர்ச்சி பக்கம் 04)

(3ம் பக்கத் தொடர்ச்சி)

# சமகால உளநிலை....

நடுவயதுப்பருவம், முதுமைப்பருவம் எனப் பருவங்களாகக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பருவத்திலும் அப்பருவத்திற்குரிய சவால்களையும், இடையூறுகளையும், முதிர்ச்சியையும், முன் அனுபவங்களையும் ஒவ்வொருவரும் எதிர்கொள்ள வேண்டும். மனித வளர்ச்சி ஆனது தொடர் நிகழ்வுகளால் அல்லது அனுபவங்களால் ஒவ்வொரு பருவமும் அப்பருவத்திற்கு முந்திய பருவத்தில் பெற்ற முதிர்ச்சியையும், படிப்பினையையும் அடுத்த பருவத்திற்கு கொண்டு செல்கின்றது. ஒவ்வொருபருவம் அப்பருவத்திற்குரிய சவால்களை எப்படி எதிர் கொள்கின்றது. சங்கடங்களை சமாளிக்கின்றது என்பதை வைத்தே அதற்கடுத்து எவரும் பருவங்களின் தன்மை தீர்மானிக்கப்படுகின்றது.

கருவறையிலிருந்து கல்லறை வரைக்குமான வாழ்வினில் அமைதியாகவும், சந்தோசமாகவும் குடும்பங்கள் தமது வாழ்க்கை முறையினை சரிவர நிலைநிறுத்தி முன்னோக்கிக் கொண்டு செல்லும் போது நாளாந்த மாற்றங்களினால் எழும் உளக் குழப்பங்களினாலும், உள வேதனையும் நம்பிக்கை தளர்ந்து போவதனாலும் சமூகத்தில் வலிந்து ஏற்படுத்தப்படுகின்ற சமூகம் சார் பிரச்சனைகளினாலும் ஏமாற்றங்கள், தோல்வியடைந்து வாழ்வில் சகிப்புத் தன்மையற்று பெரும்பாலானோர் உளநெருக்கீட்டிற்கும், மன அழுத்தத்திற்கும் ஆளாகின்றனர். அங்ஙனம் உளப்பிரச்சனைகளின் தாற்பரியங்களை புத்திசாதுரியமாக அணுகி உள்ளத்தை சாந்தப்படுத்தி பிரச்சினைகளை தன் வாழ்க்கையை முன்னேற்றகரமானதாகவும், இயல்பாகவும் கையாள முடியாது தவிப்பதனால் கண்ணீரிலும்,



துக்கத்திலும் சிக்கி மிகவும் சிரமப்படுகின்றான்.

உளச்சிக்கலுடன் இருக்கும் ஒருவருக்கு அதற்கான உளவியல் ரீதியான தலையீடு அவசியமாகின்றது. இங்கு உளச்சிக்கலுக்கு உட்பட்டவர் சேவைநாடி எனவும் பிரச்சினையிலிருந்து மீள தலையிடுபவராக உளவளத்துணையாளன் இருப்பார். இங்கு உளவளத்துணையாளர் உளப்பிரச்சினைகளை விஞ்ஞானரீதியாக அறிந்து கொள்ளவும், சிகிச்சை செய்யும் திறன் அறிவுபூர்வமாகவும் சரியான முறையில் கையாளக்கூடிய திறனையும் கொண்டிருக்கையில் ஓர் தொழில்வாண்மையான உளவளத்துணையாளர் Professional counsellar ஆக ஏற்றுக் கொள்ளப்படுகிறான்.

எமது வடமாகாண சமுதாய கட்டமைப்பில் தனிநபர், குடும்ப தொழில் மற்றும் சமூக ரீதியான பேண்தகு உறவுநிலை கட்டமைப்புகள் சிக்கலுக்குள்ளாகி சிதைவடைந்து போகின்றன. இதனால் சமூகத்தினரும் உடல், உள, நோய்களால் பாதிக்கப்பட்டவர்களும் இயல்பான முயற்சிகளினூடே தமது பிரச்சினைகளில் இருந்து மீள முடியாது போகையில் புதிய சமூக வன்முறைகளும் சமுதாய கலாசார விழுமிய பிறழ்வுகளுக்கும் இட்டுச் செல்கின்றது.பின்வருமாறு உளவளத் துணையாளனின் தலையீடும், பங்களிப்பும் உருவாகின்றது. தனிநபர் உளவளத்துணை, குடும்ப உளவளத்துணை, குழு ரீதியான உளவளத்துணை ஒரு மனிதனுக்கு உளப்பிரச்சனை ஏற்பட உயிரியல் விஞ்ஞானக் காரணிகள், உளவியல் ரீதியான காரணிகள், சமூக மற்றும் சூழற் காரணிகள் காரணங்களாகின்றன. இவற்றை புரிந்துணர்வுடன் உளவளத்துணையாளன் தன்திறன்களினூடாக தனது சமுதாய, கலாசார விழுமியங்கள், அதன் சிதைவுகள் தொடர்பில் ஆழ்ந்த அறிவாற்றலினூடாக தன்னை நாடிவரும் சேவைநாடிக்கு பிரச்சினைக் கலாசாரத்தின் பின்னரான நிலை, பிரச்சினையில் அகப்பட்டிருக்கும்போது உள்ளநிலை, பிரச்சினைகளிலிருந்து மீள பாதிக்காத வண்ணம் தனது சேவைநாடியினை தயார்படுத்த வேண்டும்.

*எமது சமுதாய பிரச்சினைகள்*

1) இயற்கை சமநிலை மாற்றங்களினால் ஏற்பட்ட ஆழிப்பேரலை, அடைமழை, வெள்ளப்பெருக்கு, வரட்சி அனர்த்தங்களினால் சொந்தம், சுற்றம், சுகாதாரம், வாழ்வாதாரம் இழந்து புதிய சூழல்களை எதிர்கொள்வதனாலும், பொருளாதார இழப்பீடுகளினாலும், சமூகக் கட்டமைப்பு சீரின்மையினாலும் உறவுகளின் இழப்புக்களினாலும் பிற ஏனைய சூழ்நிலைகளாலும் கதிகலங்கி மன அமைதியை இழந்து உளநெருக்கீடுகளின் மத்தியில் வாழ்கின்றனர்.
2) நாட்பட்ட வியாதிகள், புற்றுநோய், எயிட்ஸ், தீவிர டெங்குகாய்ச்சல் போன்ற நோய்த்தாக்கங்கள் உடல், உள நியைில் நோய்ச்சிக்கல்களுடனான தாக்கங்களை கணிசமான நாட்களுடன் கடந்து வாழ்க்கை முறையினை தொடரும்போது உளச்சிக்கல்களை எதிர்கொண்டு எம்மத்தியில் சகமனிதர்களாக வாழ்கின்றனர்.
3) உள்நாட்டு தமிழர் உரிமைக்கான யுத்தம், இனவன்செயல்கள் காரணமாக போதிய போசாக்கு, உடை, சொந்த நிலக்குடியிருப்புக்கள் இன்றியும், உரிய மருத்துவ வசதிகள், உடல் அவயவங்களின் இழப்பு, உள்ளூர்இடம்பெயர்வுகள் தோல்வி காணும் நிலமீட்பு, காணாமற்போனோருக்கான மீட்புப் போராட்டங்கள், அரசியல் கைதிகள் சிறைவாசம், பாலியல் வன்கொடுமைகள், சித்திரவதைகள், மனிதஉரிமை மீறல்கள் என காரசாரமான பல பிரச்சினைகளில் ஏதோவொரு வழியில் அகப்பட்டு மீளவழி தெரியாது மனச்சஞ்சலங்களுடன் கூடிய வாழ்க்கை அவர்களின் மனநிலைசார் சமநிலையை இன்றைய நாட்களில் குலைத்து விட்டிருக்கிறது.
4) யுத்த வன்முறை காலத்தின் பின்னரான இக்காலத்தில் இளம் வயதினரிடையே மேல் எழும் வன்முறை – வாள்வெட்டு கலாசாரங்கள், சட்டவிரோத போதைப்பொருள் உற்பத்தி, மற்றும் பாவனையின் சடுதியான அதிகரிப்பு கொலைகளுடன் கூடிய களவுகள், பாலியற் துஷ்பிரயோகங்கள், முறையற்ற சாராயத்தினால் ஏற்படும் வீதிவிபத்துக்கள், தற்கொலைகள், வேலையற்ற பட்டதாரிகள் என இளைஞர், யுவதிகள் தமது மனவலிமையைக் கொண்டு தமது மனவெழுச்சி, சீரியசிந்தனை, சீரிய பழக்கவழக்கங்களைக் கையாள முடியாமல் பாதிப்புற்று உடல், உள ரீதியான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து முன்னேற்றம் அற்று வாழ்வில் தோல்வி நிலையடைகின்றனர்.
5) ஏதோவொரு வழியில் தமது பொருளாதார நிலையினை தக்கவைத்துக் கொண்டவர்கள் உள்நாட்டு இடப்பெயர்வுகளினாலும், இயற்கை அனர்த்தங்களினாலும், அரசபாதுகாப்பு கெடுபிடிகளாலும், இன்னொரு சமூகத்தினருடைய அத்துமீறல்களினாலும், அத்துமீறிய மீன்பிடித்தல், விவசாயம், வறட்சி, கடன்சிக்கல்கள் காரணமாக குடும்ப வாழ்வாதாரத்தை முன்னோக்கிக் கொண்டு செல்ல 'முடியாமல் மனச்சோர்வுக்கு உட்பட்டு மீளமுடியாமல் தவிக்கின்றார்கள்.

இவ்வகையான பாதிப்புற்றோருக்கு உடல், உள, சக ஆன்மீகம் ரீதியில் பிறிதொரு நபரினால் உதவி அவசியம். ஒருவரின் குழப்பகரமான மனநிலைக்கும், அசௌகரிய வாழ்க்கை நிலைக்கும் காரணமாக அமையும் எந்தவொரு சம்பவமும் மன அழுத்தத்தை உருவாக்கும். இந்த மன அழுத்தநிலை கவனத்திற்கு கொள்ளாத நிலையில் உளநோயை ஏற்படுத்தும் வாய்ப்புண்டு.

ஒருநபர் உளப்பாதிப்பினை அடைகின்ற போது அதனால் குடும்ப கட்டமைப்புக்கள், சமூக கலாசார விழுமியங்கள், பொருளாதார முன்னேற்றங்களில் பாதிக்கப்பட்ட தனிநபர் குடும்பம்–கிராமம்–நாடு என ஆரோக்கியமான சமூக, பொருளாதார பங்களிப்பினை ஆற்ற முடியாது போகின்றது. சமூக அபிவிருத்தியில் துரதிஸ்டமான எதிர்விளைவுகளை கணிசமான அளவு ஏற்படுத்துகின்றது. உளநலம் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது நாடு பொருளாதார சிக்கல்களையும், சமூக கட்டமைப்புக்களின் வினைத்திறனும் பாதிப்பிற்குள்ளாவது துரதிஸ்டமானது. இது நாட்டின் கட்டமைப்புக்களின் அபிவிருத்தியில் பின்னடைவையும் சமூகமூலதனம், கட்டுமானம், நிறுவனம் என்பவற்றில் பின்தங்கிய நிலையையும் சமூக அடிப்படை ரீதியில் சமூகமயமாக்கல், சமூகவிழுமியங்கள், சமூகவலைப்பின்னல்கள் போன்றவற்றில் கணிசமான பின்விளைவுகளையும் ஏற்படுத்தியுள்ளது கண்கூடு.

உளநோயைக் குணப்படுத்த முடியாமைக்குப் பல காரணங்கள் உண்டு. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மக்களின் உளநலம் தொடர்பில் ஆராயும்போது ஆயுதப்போராட்டம் சமூக ரீதியில் ஏற்படுத்தியிருக்கின்ற சீரழிந்த விளைவுகளைப் பற்றி யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பேராசிரியர் தயா சோமசுந்தரம் விபரிக்கையில் அக்கறையுடன் கூடியஆனால் அரைகுறையான உதவி வழங்கல்களினாலும் உள்ளூர் பண்பாட்டில் பாரதூரமான அழிவை ஏற்படுத்துகின்ற பக்கவிளைவுகளைப் பற்றியும் எச்சரித்துள்ளார்.

டாக்டர் சோமசுந்தரத்தின் கூற்றுப்படி உளநல மேம்பாடு மற்றும் யுத்தத்தின் காரணமாக ஏற்படக்கூடிய உளநல பிரச்சினைகளை கையாளல் தொடர்பான உதவித்திட்டங்கள் சமுதாயத்தை அடியொட்டியதாக இருக்க வேண்டும் என்கிறார்.

எப்பொழுதும் மதிப்பும், ஏற்றுக்கொள்ளுதலும் தோல்வியடைகிறதோ, அப்பொழுது தாங்கள் பாதிக்கப்பட்டுவிட்டோம் என்று உணர்கின்றவர்கள் ஏற்பட்டிருக்கின்ற பிளவுகளை நியாயப்படுத்துவதற்காக வேறுபாடுகளை வெளிச்சப்பாடுத்திக் காட்டுவார்கள். "உண்மையில் பிளவுகள் வேறுபாடுகளால் தோன்றவில்லை. அவை அவமானப்படுத்தலின் அடியாகவே தோன்றுகின்றன' என உளவியலாளர் கூஸ் லண்டர்வீர் கூறுகின்றார். மனித குலத்தோர் அனைவருக்கும் மதனிதருக்குரிய கௌரவம் கிடைக்கப்பெற வேண்டும் என் மனித உரிமைகள் இலட்சியப்படுத்துகின்றமை மிக உயர்ந்த இலட்சியமாகும். அவை மீறப்படுகின்ற சந்தர்ப்பங்களில் எல்லாம் அவமானப்பட்டு விட்டோம் என்ற உணர்வை மிக அதிகளவில் தோற்றுவிக்கின்றன.

மேலும் முன்னோக்கிய விடயங்களை நோக்கிப் பயணிப்பதற்கு சான்றோர்களைக் கொண்ட பிரத்தியேகபொதுநலன்சார், அரச, அரசசார்பற்ற கட்டமைப்பு அமைப்பு உருவாக்கப்பட்டு எமது சமூக, பொருளாதார விழுமியங்களுக்கு உடபட்டு நியாயமான அபிவிருத்தி மற்றும் நலன்சார் விடயங்களை பேணுவதினூடாக சாதகமான பல விடயங்களை ஏற்படுத்தி சமுதாயத்தை நல்ல உளநலமுள்ள சமுதாயமாகப் பேணலாம்.

# புத்தாண்டும் பூவையும்

நசீரா அப்துல் அசீஸ்

எதிர்வரும் நாட்களின் நகர்வை ஏகாந்தத்துடன் எதிர்பார்த்து காத்திருக்கும் மாதர்கள் மனங்கள் எதிர்நோக்கும் அந்நாள்தான் நத்தார் பண்டிகை புதுவருடக் கொண்டாட்ட வருகை.

பெற்றோர்கள் பிள்ளைகளுடனும் உற்றார் உறவினருடனும் குதூகலித்து கொண்டாடி மகிழ அதை வரவேற்க ஆவலுடன் காத்திருக்கின்றனர் அனைவரும்.

ஆம்! நாம் இப்புத்தாண்டின் வரவேற்பிலே பல நல்ல முயற்சிகளில் முனைப்பாக இருந்து ஒரு தோட்டத்திலே பூத்துக்குலுங்கும் பல மலர்களின் சிரிப்பிலே லயிப்பது போல எம்மைச்சுற்றியுள்ளோர் அனைவரும் சிரிப்புடனும் சந்தோசத்துடனும் வாழ உந்துசக்தியாக உறுதுணை புரியவேண்டும். அதற்காக பெண்களே உலகின் கண்கள் என்ற வரைவிலக்கணத்துக்கு உதாரணமாக வாழும் பெண்களான நாம் எம் பங்களிப்புக்களை தாராளமாகத் தர முனைப்பாக வேண்டும். காரணம் எம் சிறார்களின் ஆரம்பப் பாடசாலை எம் மடியின அரவணைப்பு என்ற போது அந்த அத்திவாரம் ஆட்டம் காணாது வளர்க்கப்படும் போது எதிர்காலக் கட்டிடம் நிம்மதி நிறைந்ததோர் நிலையான கட்டிடமாக மிளிரும்.

ஒருவரின் வெற்றிக்குப் பின்னால் எப்பவும் ஓர் பெண் இருப்பாள். என்ற வார்த்தையை நாம் மெய்ப்பிக்க வேண்டுமேயானால் நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகமாக விளங்கச் செய்வது எம் பொறுப்பு. இதை சிரமேற்கொண்டு செயல்பட்டால் ஓர் அன்பான இல்லத்தை அழகான ஊரை,அமைதியான நாட்டை நாம் கண்டுகளிப்போம். அதற்காக சர்வமதங்களும் தத்தமது வேதங்களில் எடுத்துக்கூறும் போதங்களின் சிறப்புக்களை அவர்களுக்கு உணர்த்தி அதன் உண்மையையும் நன்மையையும் எடுத்தேகி வரும்வேளையிலே இறையச்சப்பாடு மனதின் உச்சத்தில் வளர்க்கப்பட்டு மறை கூறும் மகிமைகள் பரிகாரமளிக்க நீதிநிலைத்து அநீதி ஒழிய அங்கு வழிகோலப்படும். இதனால் கலாசார சீர்கேடுகள் அநாச்சார ஆபாசங்கள் பழிவாங்கும் படங்களின் பரிதாபங்கள் போன்ற பக்குவமற்ற நிலை மாறி நான் ஓர் தமிழர்.நான் ஓர் கிறிஸ்தவர்.நான் ஓர் இந்து. நான் ஓர் முஸ்லீம் என்ற தன்மானம் ஒவ்வொரு மனிதனுக்கும் தழைத்தோங்கி அவன் வாழ்வில் ஒழுக்கம் உயிரிலும் ஓம்பப்படும் என்ற உணர்வும், பேணுதல் பேணின் பெருமை சேரும் என்ற ஆர்வமும் கட்டுப்பாடு கவலை போக்கும் மருந்து என்ற ஆர்வமும் கட்டுப்பாடு கவலை போக்கும் மருந்து என்ற தேர்வும் உணர்வலைகளாக தளைத்தோங்கும்.

இந்நிலை தொடரும் வேளை, இன்றைய இளம் சிறார்கள் எதிர்காலத்தை வழிநடத்தும் நாளைய தலைவராக உருவாகுவதை யாராலும் தடுக்க முடியாது. உதவாக்கரைகளாக உலாவராதிருப்பதையும் யாராலும் பார்த்து மகிழாதிருக்க முடியாது. எனவே இவற்றை வென்றெடுத்து அழிவுகளிலிருந்தும் இழிவுகளிலிருந்தும் எம் பிஞ்சுகள் பாதுகாக்கப்படவேண்டுமானால் பெண்களான எம் பங்களிப்பு முக்கியம். பெண்மையில் பூத்த புனிதங்களின் உருவை ஈன்ற பெருமையுடன் எம் வளர்ப்பின் அச்சாணி அன்பையும் பாசத்தையும் அள்ளி வீசி நேசத்தின் அரவணைப்புடன் வளர்த்து ஆளாக்கி இருளுலகுக்கு அவர்களை ஆளாக்காது வெளிச்சப் பூக்களின் தூரல்களின் சாரல்களாக சங்கமமாக முயற்சிக்க வேண்டும்.

இதுவே எமது மலரும் இப்புத்தாண்டின் உறுதி பூணுதலாகவும் இருக்க வேண்டும் இதனாலேதான் நிச்சயமாக எம் வழிநடத்தல்கள் நல்வாழ்வளித்த பெருமைக்கு



வழிசமைப்பது சாத்தியமாகும். ஆதலினால் மலரும் இப்புத்தாண்டு எம் அனைவருக்கும் மகிழ்வைத்தந்து கொலை, கொள்ளை, பலாத்காரம், மண்ணாசை, பொன்னாசை என்ற பேராசைகள் ஒழிக்கப்பட்டு கருணை, அன்பு, சகோதரத்துவம், சமத்துவம், சமாதானம் நிறைந்த புத்தாண்டாக இவ்வாண்டு மலர நாம் அனைவரும் எம் இறையதை தொழுவோம்.

---

# தவளைகள் கத்துவது எப்பவும் மழை பெலக்கத் தானே

புற்றீசல்கள் புறப்படுகிறது மழைக்காலம் என்பதை அடையாளப்படுத்துகிறது பலதும் பறந்து மின்விளக்கில் மோதி காலையில் இறந்து கிடக்கிறது.

என்ன புதிய பாடத்தைப் பிள்ளைகளுக்குப் படிப்பிக்கிறீர் விசு அண்ணே என அருகில் குந்தினார் தில்லையர்.

தம்பி மழைக்காகலம் வருகுது எண்டா அதுக்கு முன்னம் தும்பியள் பறக்கும், ஈசல்கள் பறக்கும், எறும்புகள் படையெடுக்கும், அந்த ஜீவன்கள் முன்கூட்டியே அறிஞ்சிடும். அதைப் பாத்துத்தானே முன்னைய மக்கள் தங்கட விவசாயத்தை பாதுகாத்து விதைச்சவையள்.

அதுசரி இப்ப இதைப்போய் பிள்ளையள் என்ன விவசாயிகள் குடும்பத்தினர் பார்த்து செய்யினமோ இப்ப எல்லாம் ரீ.விக்கு முன்னால இருந்து நாடகம்,படம் பாக்கிறது தானே எங்கட சனம். இதை சின்னஞ்சிறுசுகளும் பாத்திட்டு பேக்கறிகளில தாறத திண்டிட்டு போறதுகளிட்ட இதை சொல்லி என்ன பயன் அண்ணே.

தம்பி தில்லை சின்னஞ்சிறுசுகளுக்கு விளங்க வைக்க இதுகள் தான் நல்ல வழி பெரிசுகளுக்கு புரிய வைக்கிறது தானே பெரிய சிரமமாய் போச்சு. எல்லாரும் இப்ப ரீ.வியில வாறதப் பாத்துத் தானே தங்கட வாழ்க்கை ஒழுங்குபடுத்தினம் எண்டார் விசுஅண்ணை.

இதை எப்படி சொல்லுவியள் ரீ.வியில பொழுது போக்குத்தானே. இதைப்போய் எங்கட வாழ்க்கையோட பொருத்தப் பாக்கிறியளே. பொழுதுபோக்கா இருந்தது தான் இப்ப வாழ்வாக்கிப் போட்டினம். இப்ப ரீ.வியில எந்த நாடகம், படம் ஒருவனுக்கு ஒருத்தி என்றதை சொல்லுது இரண்டு மூண்டு பேரை குடும்பத்தில மாறி மாறி வைச்சு குடும்பம் நடாத்திறத இந்த நாடகங்கள் கற்றுக் கொடுத்தது. பொழுதுபோக்காகி இப்ப ஒருவனுக்கு ஒருத்தி எண்ட பண்பாடு எத்தனை குடும்பத்தில மாறி வருகுது. அதை விதைச்சதால தானே அது குறை இல்ல குற்றமில்லை எண்டு விவாகரத்து வழக்குகள் ஏற்றுக் கொள்ள வைச்சுது. இதை முந்தி செய்த மக்கள் முன் நடமாட முடியுமா சொல்லு, பொது இடங்களில அவையள ஏற்றுக் கொள்ளமுடியுமா? இப்ப அப்பிடியானவையள் தானே முன்னுக்கு நிக்கினம் இதை மெல்ல மெல்ல ஏற்றுக் கொள்ள வைச்சது எல்லாம் இந்தத் தொடர்பு சாதனங்கள் தானே தில்லை.

மனம் இறுகிய நிலையில் ஆன்மீக வழிகாட்டல் இன்மையும், தொலைக்காட்சித் தொல்லையும் தனது வீட்டிலையும் பரவினதை கவலையோட சொன்னார் தில்லை.

அண்ணோ முந்தி நாங்க மாலை ஆறுமணி எண்டா சாமி கும்பிட்டு படிக்கிறவையள் படிக்க, சமைக்கிறவையள் சமைக்க கோழி, ஆடு, மாடுகளைக் கட்டில போட்டு குடும்பமாக உணவருந்தினது எல்லாம் கனவாகப் போக இந்த ரீ.வி எப்ப வீட்டுக்கு வந்துதோ அப்ப தொலைஞ்சது மாலை வழிபாடும், வீட்டு தேவைகளை உற்பத்தி செய்த தோட்டந்துரவும் இல்லாம ரீ.விக்கு முன்ன இருந்து கொண்டு பிள்ளையள படியெண்டு சொன்னா அதுகள் எங்க படிக்கிறது, ஆன்மீகத்த தேடுறது எப்படி

கணேசண்ணே பேப்பரோட வாறார் ஏதும் புதினம் இருக்கும் போல..

ஓசிப்பேப்பர் படிக்கிறது தானே இப்ப கைவந்த கலை என தில்லையின் கையில் குத்தல் கதையோட கொடுத்தார் கணேசு.

பேப்பரில என்ன கிடக்கு எல்லாம் இரவோடு

## கேட்டியளே சங்கதி



- வானம்பாடி -

மாறிவிடும் பேப்பர் செய்தியள் இப்ப பழசாப்போறதுக்கு எங்கட நாட்டு செய்தி இரவுத்தீர்மானங்களில தானே தங்கியிருக்கு எண்டார் தில்லையர்.

ஓம்ஓம் நீ சொல்லுறதும் சரிதான் இருட்டுக்க தானே இப்ப பலவேலை நடக்குது. முன்னம் கள்ளன்கள் வருவாங்க எண்டு விழிச்சிருந்தும் இப்ப பல கட்சி மாற்றங்கள், அரசியல் மாற்றங்கள் , விலைவாசி மாற்றங்கள்,மந்திரி தலைமாற்றங்கள் எல்லாம் இரவில தான் நடக்குது அது தான் ஏனெண்டு தெரியேல்லை எண்டார் கணேசு.

பகலில நடந்தா பலருக்கு தெரிஞ்சுடும் இரவில தானே முந்தியாரோட யார் ஓடினது, யாருக்கு யார் என்ன செய்யினம் எண்டது தெரிஞ்சிடும். அது தான் கொடுக்கல் வாங்கல் செய்ய நல்ல நேரம் பார்த்து செய்வினம் போல. ஒளிஞ்சு ஓடுறது கூட இரவில தானே நடக்குது.

விசுஅண்ணே சின்னஞ்சிறுசுகளை வைச்சுக் கொண்டு நாங்க எதைஎதையோ பேசுறம் பின்னுக்கு இதுகளும் கெட்டுபோயிடும் எல்லோ எண்டார் தில்லை.

ஓம் தம்பி ஓம் இப்ப சின்னன்களுக்கு முன் மாதிரியாக பெரிசுகள் இருக்க எங்களுக்கு யார் முன்மாதிரியா இருந்திச்சினம் நான் அவையளுக்கு விளங்க வைக்கத்தானே மழை வரும் எண்டா எதுமுன் வரும் எண்டு சொன்னதிலயும் ஒரு அர்த்தமுண்டு தெரியுமோ எண்டார் விசுவாத்தி.

என்ன புதுக்கதை சொல்லுறியள் விசு அண்ணே என்றார் கணேசு.

புற்றீசல் புறப்படுற மாதிரி புதுப்புதுகட்சிகள் எங்களை வழிகாட்ட தாங்களே தங்களை கட்சி தலைவர்கள் எண்டு சொல்லி வருகினம் எண்டா தேர்தல் எண்ட மழை வருகுது எண்டு சொல்ல வந்தன்.

முற்றத்தில பலரும் புதுசா சிரிப்போட உறவு கொண்டாட, பிறரை குறை சொல்லி தண்ணி குடிக்க வருவினம். இவையள போல தானே முன்பும் பலரும் வந்தவையள். அவையள் வந்து போனவையள் தான். இவையள் அப்படி இல்லையாம் என புதுவாக்குறுதி தர வருகினம். இது போல போனமுறை இவையள் வரேக்க பிடிச்சு வந்த குடை நிறம் வேற இப்ப புதுசா சால்வை வேட்டி கட்டி வருகினம் கலாச்சாரத்தோட

இப்பதான் எங்கட வீதியள், ஒழுக்குவீடுகள் பற்றிய கரிசனை காட்டுகினம். இதுபோல புது முகங்கள், புது உறவுகள் அண்டைக்கு குடையில வந்தவர் இப்ப தொப்பி போட்டு வருகிறார்கள் பாத்தியோ. ப்ல தம்பிகள் தும்பிகளாக துடிப்பா பறக்குதுகள். இவர்கள் பாவம் கொடிகட்டவும், சுவரில துண்டு ஒட்டவும் பயன்படுத்திறத உணருறதில்ல பாரு.

சரியா சொன்னியள் அண்ணே அங்கபோய் எங்கள் யார் எண்டு கேட்கிறது மட்டுமில்ல அங்க படுகிற பாட்ட பாக்க இந்த ரீ.வி சீரியல விட்டுட்டு எங்கட வீட்டில செய்தியள் பார்க்கிற ஆட்கள் கூடி இருக்குப் போல இப்ப தமிழ் செய்திகள் மட்டுமல்ல பிறமொழி செய்து பார்த்து ரசிக்கிறதுக்கு எங்கட பிரதிநிதிகளின்ர சுயரூபம் நல்லாத் தெரியுது. இதுக்குள்ள தூளோ, கத்தியோ, கஞ்சாவோ கொடுக்க இருக்கும். அதுகளின்ர குடும்பமும் கண்டிக்கிறது இல்லையாக்கும். எல்லாமே ஒரு குட்டையில ஊறின மட்டையள் தானே?

# குழையல் சோறு

## சிறுகதை

அ.சகாயராசா (வினோத்)
திருநகர்

பாடசாலை பரபரப்பாகிறது. இலவசமாக போசாக்கு உணவு பிள்ளைகளுக்கு கொடுக்கும் திட்டம் அந்தப்பாடசாலையில் அறிமுகப்படுத்தப்படுகிறது. அநேக மாணவர்களின் முகங்களில் புதிய ஒளிவட்டம். குதூகலிப்பு, புதுத்தென்பு, சோர்வின்மை, மாணவர்களின் வரவு அதிகரிப்பு, காலைச்சாப்பாடு உண்ணாமல் வரும் மாணவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம். சில நாட்கள் கரைந்தோடுகிறது.

"இந்தாம்மா.. பள்ளிக்கூடத்தில தந்தவங்க.. குழையல் சோறு. சாப்பிட்டு பாருங்கம்மா.. எனக்கு ஒரே இத சாப்பிட வயிறு ஒரு மாதிரியிருக்கம்மா."



குழையல் சோற்றை கையில் வாங்கிய பாக்கியம். லேசா கொஞ்ச சோற்றை ருசி பார்கிறாள். ஏதோ வித்தியாசத்தை உணருகிறாள்.

"இதையா நீங்க சாப்பிடுறீங்க"

"ஓமம்மா.. எனக்கு இத சாப்பிட்டால் வயித்துக்க கலக்குது.."

மலசலகூடத்தை நோக்கி ஓடுகின்ற மகனை புதினமாகப் பார்ப்பதொன்றும் அவளுக்குப் புதிதல்ல.

"ஒருவேளை பதினொருமணிக்கு குடுக்கின்ற குழையல் சோறுதானே.. அதுதான் அவனுக்கு ஒத்துக்கொள்ளவில்லைபோல." தன்னையே ஆசுவாசப்படுத்தியவள் அதிலிருந்த ஒரேயொரு நெத்தலி மீனை ருசிபார்க்கிறாள்.

"தூ.. தூ.. எனத் துப்பியவள், அந்த நெத்தலி மீனுக்குள்ளிருக்கும் மண்ணின் கரகரப்பை உணர்ந்துவிட்டாள்.

"அவனுக்குப் பிரியமான நெத்தலியில் மண் கரகரப்பையும், குழையல்சோற்றின் ருசியின்மையையும் யாரிடம் அவள் சொல்லி முறையிடுவது.? பள்ளிக்கூடத்தில சும்மா குடுக்கிற சாப்பாடுதானேயது. இதை யாரு சமைக்கிறார்கள்? எப்படி சமைக்கிறார்கள்? இதில என்னென்ன சத்திருக்கு.. அப்படி.. இப்படியென" பலத்த யோசனையில் மூழ்கிப்போனாள்.

இருபத்தோராம் நூற்றாண்டிலும் இன்னும் வறுமையிலிருந்து அவளின் குடும்பம் மீளவில்லை.அவளுக்கென்று சொத்தெதுவுமில்லை. சொந்தங்களும் கடைசியாக நடந்த சண்டையில கருகிப்போச்சுதுகள். விதியமைத்த வாழ்கையென கழுத்தை நீட்டியவள் ஒரு வருசத்துக்குள்ள வயித்தில புள்ளயிருக்க வேறொண்ட தேடிப்போச்சுது. அந்த உத்தம புருசன். தனியாக ஒரு கைக்குழந்தையோட பாரதி படைத்த வீரச்சியாய், எதிர்ப்பலைகளுக்கு மத்தியிலும் பல வருடங்களைக் கடந்திருக்கிறாள்.

வீட்டிலிருந்தே இடியப்பம் அவிச்சுவிக்கிற பாக்கியம்மாவுக்கு கைக்கெட்டுற காசு வாய்க்கெட்டாத வாழ்க்கையாப் போச்சுது. ஆனாலும் கூரையப் பிச்சுக்கொண்டு குடுக்கிற கடவுளப்போல பள்ளிக்கூடத்திலயே போசாக்கு உணவு கிடைப்பது ஒரு ஆறுதலாகவிருந்தது. அதுகூட சரியான முறையில் தயாரிக்கப்பட்ட போசாக்கான சாப்பாடா என்று தான் தெரியவில்லை.

பிஞ்சு மனசுக்கு குடும்ப வறுமை, உழைப்பு, சேமிப்பு, பொருளாதாரம், விலையுயர்வு, வாழ்வாதார செலவு இவற்றை அறிந்திருக்க வாய்ப்பேயில்லை. எத்தின நாள் காலையில சாப்பிடாமலே பள்ளிக் கூடத்திற்குப் போயிருப்பான். அவனைப்போல இன்னும் எத்தனை பேரோ..?

நாலாமாண்டு படிக்கிற மகனுக்கு ஒவ்வொரு நாளும் காலையில "பழஞ்சோறுதான்" சாப்பாடு. "இண்டைக்கும் பழஞ்சோறா?" என்று அடிக்கடி கேட்பது வழக்கமாயிற்று. ஆனாலும் அதை சாப்பிடாமல் நேரத்தோடையே பள்ளிக்கூடத்திற்கு போயிடுவான். அங்கேதானே இப்ப அரசாங்கம் பிள்ளைகளின்ட போசாக்கை சமப்படுத்த புது சிஸ்டம் கொண்டு வந்திருக்குது.

துறுதுறுவென சுறுசுறுப்பான ஆரம்ப பள்ளிக்கூடத்தின் அபிவிருத்தி சங்க பெற்றோர் கூட்டம் நடைபெற ஆயத்தமாகிறது. அதிபர் தனது பாடசாலை சாதனையை ஆதாரப்பூர்வமாக நிரூபிக்க முயற்சிக்கிறார். கைதட்டல் மழை பொழிகிறது. இறுதியாக பெற்றோர் கேள்வி நேரம்.

"கேள்வி ஏதாவது கேட்கவிருந்தால் கேளுங்கள்..."

அதிபரின் கேள்விக்கு யார் அங்கே பதிலளிப்பார்? கேள்வி கேட்டவரின் பிள்ளையை பிழை பிடித்து ஒரு மாசத்திற்குள் வேறு பாடசாலைக்கு மாற்றிட வழிசமைத்தவராச்சே...! பெற்றோர் ஒவ்வொருவரும் "இல்லையென" தலையசைப்பதை அதிபர் நன்கு புரிந்து கொண்டார். கனத்த பெருமிதத்துடன்..! ஒரு அலட்சியப்பார்வை.



மெதுவாக எழுந்த பாக்கியம்

"சேர்"

"என்னம்மா.." உக்கிரமான கோபத் தொனியுடன்.

"சேர் நான் அபிமன்ர அம்மா.. இங்கதான் நாலாமாண்டு படிக்கிறான். அவனுக்கு ஒரே வயிற்றுழைவா இருக்கு இங்க சாப்பிடுற குழையல் சோறு அவனுக்கு ஒத்துக்கொள்ளேல்ல போல.. நானும் அத சாப்பிட்டு பார்த்தேன். ஒரு நெத்தலி மீன் கிடந்தது அதுக்குள்ள நிறைய மண் .. மீனை சரியா கழுவேல போல. வீட்டில சாப்பிடாம வாற பிள்ளைகள் கனபேர் இங்க இருக்குதுகள்.... நீங்க..." அவள் சொல்லி முடிப்பதற்குள் முந்திக் கொண்ட அதிபர்.

"இங்க பாரம்மா.. இங்க குடுக்கிற சாப்பாடு அரசாங்கம் இலவசமா குடுக்கிறது. அது சத்தான சாப்பாடு. இவ்வளவு பிள்ளைகளும் சாப்பிடுது தானே? மற்ற பெற்றோர் ஒருத்தருமே இத குறை சொல்லேலையே. ஏதாவது சந்தேகமெண்டால் டிப்பாட்மெண்ட் அதிகாரியட்ட போய் சொல்லும். மீற்றிங் முடிஞ்சுது."

நல்ல வேளை தலை தப்பியது தம்பிரான் புண்ணியமென மெதுவாக பல பெற்றோர் ஒதுங்கிக்கொண்டனர். சிலருக்கு மனதில் கேள்விகள் இருந்தாலும் கேட்பதற்குப் பயம்.

அவளின் கால்கள் நடக்கிறது. தூரம் நடக்கிறது. வெகு தூரம் நடக்கிறது. இன்னும் வெகுதூரம் நடக்கிறது. இன்று ஒரு முடிவிற்காகவும், விடிவிற்காகவும்.

"பெரியவர் இல்லையாங்க ... அவர சந்திக்கணும்."

"இல்லையம்மா இரண்டரைக்குத்தான் வருவேர். போயிற்று பிறகு வாறதெண்டால், வாங்க ஐயா இருப்பேர்."

பியோனின் கதையை அவள் ஒரு பொருட்டாக கருதவில்லை.

"நான் இருந்து சந்திச்சிட்டுப்போறேன்"

கல்வி அதிகாரியை கண்ட அவளின் மனம் பதைக்கிறது. மனது படபடக்கிறது. உண்மையை சொல்ல என்ன தயக்கம்.. ! பல கேள்விக் கணைகளேடு தயாராகிறாள். வில்லிலிருந்து புறப்பட்ட கூரான அம்புகள் போன்றே அவளது உரையாடல் அமைந்தது. கல்வி அதிகாரியின் முகத்தில் பாரிய மாற்றம் தெரிகிறது. தன் மனதிலிருந்த கேள்விகளெல்லாத்தையும் இறக்கி வைச்சு பெருமூச்சு விட்ட அவளை நோக்கி

"சரியுங்கம்மா... உங்கட பிரச்சனை எனக்கு விளங்குது. திடீரென அந்தப் பள்ளிக்கூடத்திற்கு வருவேன். நீங்க யோசிக்காம போங்க..."

இந்த முயற்சி அவனது மகனுக்காக மட்டுமன்றி அவனைப்போன்று காலைச் சாப்பாடு சாப்பிடாமல் பாடசாலைக்குப் போகும் பிள்ளைகளின் எதிர்கால போசாக்கு உணவிற்கானதே. எதனையோ சாதனை படைத்ததுபோல ஒரு வீராப்பு நடை.

செக்கன்கள் நிமிடங்களாகி,மணித்தியாலங்களாகி, நாட்களாகி, வாரமாகி, மாதம் கடந்தோடுகிறது. அந்தப் பாடசாலையில் சுற்றும் முற்றும் மாற்றத்திற்கான முதலடியும், முதல்படியும் ஆரம்பமாகிறது.

அது கல்வி அதிகாரியின் திடீர் புலன் விசாரணை. ஒருபக்கம் அதிபருக்கு தொடை கிடுகிடுப்புக் கண்டது. மறுபக்கம் பாடசாலையில் அல்லோலகல்லோலம். முகத்தில் மட்டும் எதையும் காண்பித்துக்கொள்ளாது சாந்த சொரூபியாக அதிபரின் பதில்கள் அமைகிறது.

"ஆ.... பிள்ளைகளுக்கு எங்க சாப்பாட்ட சமைக்கிறனீங்க? எத்தின பிள்ளைகளுக்கு சமைக்கிறனீங்க? பால் பழமெல்லாம் குடுக்கிறனீங்களோ? " அதிகாரியின் கேள்விக் கணைகளின் தொடர்சியான தாக்குதலை சமாளிக்க தன்னையே சுதாகரித்த அதிபர்.

"அந்த.. அந்த றூமிலதான் சமைக்கிறது சேர்."

இருண்டுபோய் கிடந்த அந்த அற்றை மெல்ல மெல்ல வெளிச்சம் பெறுகிறது. அறையின் மேலே தூசுகள் படிந்தும் கூரைமேலே கரப்பான் பூச்சிகளும் ஓடித்திரிகின்றன. சிலவேளை சமைக்கிற சாப்பாட்டில் பல்லி விழுந்தால்கூட எப்படி? விழுந்திருக்காதென்றும் நிச்சயமில்லை.

"இவையள் தானா சமைக்கிற ஆக்கள், எப்படி சுகாதாரமா சமைப்பினமா? கையெல்லாம் ஊத்தையா இருக்கு. சேர் அவையள் நல்ல ருசியா சமைப்பினம்."

"சமைக்கிற பாத்திரமெல்லாம் திறந்து கிடக்குது யாரு அதெல்லாம் மேற்பார்வை செய்யுறது?"

இப்படி கேள்வி மேல் கேள்வி கேட்டால் எப்படி அதிபர் சமாளிப்பது. "சேர் சொறி சேர்"

போசாக்கு உணவுத்திட்டம் அரசாங்கத்தால் ஆரம்பிக்கும்போது அந்த அறைக்கு வந்த அதிபர் இப்படித்தானே எட்டிப் பார்த்திருக்கிறார்.

"பிள்ளைகளுக்கு குளையல் சோறு குடுக்கிறீங்களாமே? அரசாங்கத்தால் உங்களுக்கு அனுப்பப்பட்ட போசாக்கு உணவு தொடர்பான சுற்றறிக்கை எங்கே? அத நீங்க பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் தெரியுறமாதிரி விளம்பரப்படுத்தனும்."

"இங்க பிள்ளைகள் வாறது சரியான குறைவு சேர்"

அரசாங்கம் இலவசமாக பல திட்டங்களை மாணவர்களுக்கும், மக்களுக்கும் செய்யத் தவறவில்லை. அதன் செயற்பாடு சில அதிகாரிகளாலும், பொறுப்பற்ற பலராலும் உதாசீனம் செய்யப்படுகிறது. கிடைப்பதைக் கொண்டு விமான வாழ்வை கட்டியெழுப்ப முயற்சிக்கவில்லையென்பதே நிதர்சனம்.

அதிபர் கதைத்துக் கொண்டிருக்கும்போதே கல்வி அதிகாரி தான் கொண்டுவந்த போசாக்கு திட்டம் தொடர்பான சுற்றறிக்கையை விளம்பரப்பலகையில் அனைவரின் பார்வைக்குத் தெரியும்படி காட்சிப் படுத்துகிறார்.

"ஆரோக்கியமான சுறுசுறுப்பான மாணவர் சமூகமெனும் தொனிப் பொருளில் பாடசாலை மாணவர்களின் வருகையை அதிகரிப்பதற்காகவும் பிள்ளைகளுக்கு அனைத்துவிதமான போசாக்கும் நிறைவாக கிடைக்கவும் கல்வியமைச்சினால் இச் சுற்றுநிருபம் வெளியிடப்படுகிறதெனவும், உணவுச் சட்ட விதி முறைகளும், நுகர்வோர் சட்ட விதி முமறைகளும் கடைப்பிடிக்க வேண்டுமெனவும்

உணவு தயாரிப்பவர்கள், உணவு சமைக்கும் இடம், உணவு வழங்கும் இடம், பயன்படுத்தப்படுகின்ற உபகரணங்களின் சுத்தம், சுகாதாரம் போன்றனவும் வழங்கப்படும் உணவின் போசாக்கின்தன்மை போன்றவை பாடசாலைமட்டக்குழு,சுகாதார மேம்பாட்டுக்குழு,உணவுக்குழு போன்றவற்றின் கண்காணிப்புடன் பாடசாலை அபிவிருத்தி சங்கத்துடனும் பொறுப்பொப்புவிக்கப்பட வேண்டுமெனவும்.

சிற்சில நாட்களுக்கு போசாக்கு உணவான பால், முட்டை என்பனவும், கடலை,பயறு, கௌப்பி, போன்றனவும் நெத்தலி மீன்வகைகள் இறைச்சி போன்றவை நன்றாகக் கழுவி சுத்தம் செய்யப்பட்டு சமைக்கப்பட்டதாகவும் ஏதாவது ஒரு பழம் வாழைப்பழம், அப்பிள், மாம்பழம் போன்றவற்றில் சில துண்டுகளாவதும், மூன்று பேரீச்சம்பழம் போன்றவையும், சத்துமிக்க பச்சை காய்கறிகள், மரக்கறிவகைகளும், குழையல் சோறும் உள்ளடங்கும்.

ஜோதிட விஞ்ஞானம்

ஜோதிர்வித்யாரத்னா V.A சிவராசா B.A,BPhil, Dip.in.Edu
56, அம்மன்றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். தொ.பே.:021 222 708

# எண் அதிர்ஷ்டம்

## அதிர்ஷ்ட எண்களில் பெயர் வைத்தால் முன்னேற்றமடையும்

1 - A,I,J,Q,Y
2 - B,K,R
3 - C,G,L,S
4 - D,M,T
5 - E,H,N,X
6 - U,V,W
7 - O,Z
8 - F,P
9 - K.JEYAVANI=23 -5
215116151



**பிறந்த திகதிகள் - 1-10-19-28**

உங்கள் பெயரினை 1ம் எண்ணில் வையுங்கள். மாணிக்கக்கல்லை மோதிரத்தில் பதிக்கவும். 1, 10, 19ம் திகதிகளில் புதிய காரியங்களை ஆரம்பிக்கவும்.பெண் தெய்வங்களை வணங்கவும். 1 அல்லது 4ம் எண்ணில் பிறந்தோருடன் நட்புக் கொள்ளுங்கள்.
மஞ்சள்/ இளஞ்சிவப்பு ஆடைகளை அணிவது அதிர்ஷ்டம் அளிக்கும்.

**பிறந்த திகதிகள் - 2, 11, 20, 29**

சந்திர ஆதிக்ககாரராகிய நீஞ்கள் பெயரினை 1 அல்லது6ம் எண்ணில் வையுங்கள். 19, 37, 46 – என்பன மிக்க அதிர்ஷ்டமளிக்கும். 6ல் 33 எண் மிகவும் நன்றாகும். முத்துப்பதித்து ஆபரணங்கள் அணிக. 1, 10, 19, 7, 16, 25 என்பன அதிர்ஷ்ட திகதிகள்
இளம்பச்சை நிற ஆடைகளை அணியவும்.
பெண் தெய்வங்களை வழிபடுக. 9, 18, 27 திகதிகளில் புதிய காரியங்கள் ஆரம்பிக்க வேண்டாம். -

**பிறந்த திகதிகள் - 3, 12, 21, 30**

குருபகவானின் ஆதிக்கரான உங்கள் பெயரினை 9ம் எண்ணில் வைக்கவும். 5, 14, 23, 9, 18, 27 திகதிகளில் புதிய காரியங்களை ஆரம்பிக்கலாம்.
6, 15, 24 திகதிகளில் நற்காரியங்களை விலக்கி விடவும்.
மஞ்சள் புட்பராகம் அல்லது செவ்வந்திக்கல்லை ஆபரணங்களில் பதிக்கவும்.
ஊதா நிற ஆடைகள் அதிர்ஷ்டமளிக்கும்.
போர் செய்யும் கடவுளரை வணங்கி வரவும். காதல் கனிய 5 எண்ணை நாடவும். தோலுடன் தொடர்பான நோய்களில் கவனமெடுங்கள்.

**பிறந்த திகதிகள் - 4, 13, 22, 31**

ராகுவின் ஆதிக்கத்தில் பிறந்த நீங்கள் 1ம் எண்ணில் (28தவிர) பெயரிடவும். 4ம் எண்காரருடன் நட்புக் கொள்ளவும். கோமேதகம் என்ற கல்லினைப் பதித்து அணியவும்.
8, 17, 26 திகதிகளில் தொடங்கும் காரியங்கள் நீடித்த பயன் தராது. கிழக்குத் திசையில் தலைவைத்துப் படுக்கவும். இளநீல நிற ஆடைகள் அதிர்ஷ்டமளிக்கும். காதல் மலர 1, 10, 19, 28 திகதிகளில் பிறந்தோரே ஏற்றவர்கள். பெண் தெய்வங்களை வழிபடவும். கூட்டெண் 4, 5, 8 எண் வருந்திகதிகளில் விவாகம் எழுத தாலிகட்டுவதைத் தவிர்த்து விடுங்கள்.

**பிறந்த திகதிகள் - 5, 14, 23**

ஐந்தாம் எண் புதன் ஆதிக்கத்தில் உள்ளவர்கள் பெயரினை 5, 9, 1ம் எண்ணில் வைத்து விடுங்கள். பிறப்பின் கூட்டெண் 8ஆக எவருக்கு வந்தாலும் 5ம் இலக்கத்தில் மட்டுந்தான் பெயரிட வேண்டும். புதிய காரியங்களை 2, 11, 20, 29 திகதிகளில் ஆரம்பிக்க வேண்டாம். 27ம் திகதிகளில் குருட்டு அதிர்ஷ்டம் ஏற்படலாம். வைரம் அல்லது நீல வெள்ளைக்கல்லை ஆபரணங்களில் பதிக்கவும். மகாவிஷ்ணு, பிள்ளையாரை வணங்கி வரவும். காதல் வெற்றியாக 2ம் எண்காரரை நாடக்கூடாது. சாம்பல் நிறமான ஆடைகள் தரிப்பது அதிர்ஷ்டம் ஏற்படும். வடக்கு வாசல் மனையை ஆரம்பிக்கலாம். கறுப்பு, சிவப்பு, மண்ணிற ஆடைகள் அணிய வேண்டாம்.

**பிறந்த திகதிகள் - 6, 15, 24**

சுக்கிரனின் ஆதிக்கராகிய நீங்கள் பெயரினை 6 அல்லது 9ம் எண்ணில் வைத்து அதிர்ஷ்டத்தைத் தேடிக் கொள்ளுங்கள். 3ம் எண் பெண் மணியை மணந்தால் மணவிலக்கு ஏற்படலாம். பச்சை நிறமான ஆடைகள் அதிர்ஷ்டமளிக்கும். மரகதப்பச்சைக்கல் உடலின் தோலுடன் பதியும் படி அணிந்து கொள்ளுங்கள். பெண்தெய்வ வழிபாடு விமோசனந்தரும். காதலில் சித்திபெற 3ம் எண்ணை விலக்கி விடுங்கள்.
கற்புநெறியை உயிரிலும் மேலாகப் பாதுகாருங்கள். புதிய காரியங்களை 6 அல்லது 9ம் திகதிகளில் தொடங்கலாம். பெண் தெய்வ வழிபாடுகள் உயர்ச்சியை அளிக்கும்.

**பிறந்த திகதிகள் - 7, 16, 25**

சர்ப்பக்கிரகமான கேதுவில் பிறந்த உங்கள் பெயரினை 5 அல்லது 6ம் எண்ணில் வைத்து விட்டால் முன்னேற்றப்பாதை அதிரடியாகத் திறந்துவிடும். கேதுபெருமானை திருக்கேதீஸ்வரம் சென்று வழிபட்டு வாருங்கள். தூயவெள்ளைநிற ஆடை அதிர்ஷ்டமளிக்கும். வைடூரியக் கல்லை அணிவதனால் அதிர்ஷ்ட தேவதை அரவணைப்பாள். 7, 16, 25 திகதிகளில் புதிய முயற்சிகளை ஆரம்பிக்கலாம். பிறப்பெண் கூட்டெண் 8 வருந் தினங்களில் எச்சரிக்கையாக நடமாடவும் 6 அல்லது 4ம் எண்ணில் பிறந்த பெண்களின் தொடர்பு வருத்திக் கொண்டேயிருக்கும். எனவே 1 அல்லது 3 ம் எண்களில் பிறந்த பெண்களைத் திருமணம் செய்யுங்கள்.


**பிறந்த திகதிகள் - 8, 17, 26**

விதியின் கைப்பாவை 8ம் எண்ணில் பிறந்த உங்கள் பெயர் முதலியன. 5ம் எண்ணில் அமைவது சிறப்பாகும். அதிர்ஷ்டக் கல்லாக இந்திர நீலத்தைத் தெரிவு செய்யவும். ஆஞ்சநேயர் வழிபாடு மலைபோல் வரும் சோதனைகளை நீக்கிவிடும். ஆடைகளில் மெல்லிய நீல நிறமே உகந்தது. 1, 10, 19, 5, 14, 23 திகதிகளில் புதிய காரியங்களை ஆரம்பிக்கலாம். காதலில் வெற்றி பெற 5ம் 4ம் எண்காரரை ஏறெடுத்துப் பார்க்க வேண்டாம். 2ம் தாரம் விசுவாசத்தை அதிகரிக்கும். ஒழுக்கத்தை உயிரினும் மேலாகக் கடைப்பிடிக்கவும். கூட்டெண் 8 வரும் தினங்களில் பயண முயற்சிகளைக் கை விடவும். 4ம் எண் நன்றாக ஒத்துப்போகும்.

**பிறந்த திகதிகள் - 9, 18, 27**

செவ்வாயின் ஆதிக்க எண்ணில் உதித்த உங்களின் பெயரை 9 அல்லது 5 எண்ணில் மட்டுமே வைத்து விடில் அதிஷ்டம் பலவித நன்மைகளைத் தேடித்தரும். பவளக்கல் பதித்த ஆபரணங்களை அணியுங்கள். போராட்டமே தாரக மந்திரமாகக் கொண்ட உங்கள் பலாபலன்கள் பிறருக்கு நன்மை பயக்க கைம்மாறு கருதாது உதவி செய்யுங்கள். சிவப்பு நிற ஆடைகள் அதிர்ஷ்டம் தரும். 2, 11, 20, 29 ஆகிய திகதிகளை நல்ல செயல்கள் ஆரம்பிக்கப் பயன்படுத்த வேண்டாம். காதலில் அவசரப் போக்கு தோல்வியைத் தரலாம். 3ம் எண்ணில் பிறந்தோரை விரும்புங்கள். போர் செய்யும் முருகன் முதலான தெய்வங்களை வழிபாடு செய்யவும்.





யாழ் களரி 10ஆவது இதழ் அறிமுகமும், ஊடகவியலாளர் கருத்தமர்வும் 09.11.2018 காலை 10.00 மணிக்கு கியூடெக்கரித்தாஸ் நிறுவன மண்டபத்தில் அருட்தந்தை யூஜின்பிரான்சிஸ் அடிகளாரின் தலைமையில் நடைடபெற்றது. இதில் யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல்துறைத் தலைவர் கே.ரி கணேசலிங்கம் பிரதி பெற்றுக் கொள்வதையும் ஊடகவியலாளர்களையும் படங்களில் காணலாம்.

# சினிமாவை வென்ற சீரியல் காட்சிகள்



வீதிசண்டை, சந்தைசண்டைகளை விட நம்ப நாட்டு பாராளுமன்ற சண்டையை வெல்ல எந்த ரீ.வி நாடகமோ, திரைப்படமோ இதுவரை வெளிவரவில்லை. காட்டுவாசிகள் தங்கள் சுயரூபத்தைக் காட்ட கிடைத்த சந்தர்ப்பமே இது. எமது கலாசார, பண்பாட்டு, ஆன்மீக நெறிகளெல்லாம் போலி வேடமாக பல்சமய விழாக்களில் இவர்கள் நாடகமாடிய விதமும் மக்கள் பிரதிநிதிகளாக குரல் கொடுக்க அனுப்பிய எங்கள் பிரதிநிதிகள் என்பது அடையாளப்படுத்த முடியாதளவு சினிமாவை வென்ற சண்டைக்காட்சிகளும் எதிர்கால சந்ததியினருக்கு புதிய சிந்தனைகள் தந்த தலைவர்களும், அவர்கள் வாரிசுகளும் நடத்திய சிறந்த சுயவெளிப்பாடுகள் சூனியமாக்கி விட்டது. எமது நாட்டு கௌரவத்தை அழிக்க முன்கூட்டி திட்டமிட்டிருந்ததால் தானே கத்தி, மிளகாய்த்தூள் கொண்டு வர முடிந்தது. யாரைக் கொல்ல, யாரைக் குருடாக்க கட்சியில் திட்டமிட்டு பொறுப்புக் கொடுக்கப்பட்டது. இதற்கு யார் பொறுப்புக் கூறுவார்கள். கோடிக்கணக்கான மக்கள் வரிப்பணம் உங்களால் அழிவானது.

- இப்பதிவுகளை யாரும் ஒலிப்பதிவுத் தொடராக வெளியிட்டால் அதற்கு நல்ல மவுசுண்டு. இதனால் கூட வருவாய் பெருக்கலாம். இவர்கள் தானே ஆலயங்கள், கோவில்கள், விகாரைகள், மசூதிகள் முன்னுரிமை கொடுத்தும் முன் இருக்கைகள் பெற்று கௌரவிக்கப்பட்டவர்கள் என எண்ணிப் பார்க்கையில் ஏற்பட்ட புத்தகங்கள் பிடுங்கப்பட்ட தொலைத்தொடர்புசாதனங்கள், அரியாசனங்கள் சிதைக்கப்பட்டவர்களை வழிகாட்டும் கட்சிகளும், தலைமைகளும் அவர்களை பாராட்டி விழாஎடுப்பார்கள். அடுத்த தேர்தலில் முன்னுரிமை கொடுப்பார்கள். பாவம் மக்கள் என்ன விடை கொடுப்பார்கள். மீண்டும் வருவார்கள். உங்கள் வாக்குறுதி தீர்மானிக்கட்டும்.

( 03 பக்கத் தொடர்ச்சி)

# காலங்கள்....

தக்கவைத்து விடுவார்கள். எம்தமிழரின் விடயம் எதுவும் இதுவரையில் நிறைவேற்ற பல சந்தர்ப்பங்கள் இருந்தது. காலமும் இருந்தது. கூட்டாகவோ, தனியாகவோ துணிவாகவே எந்தத் தரப்பினரும் குரல் கொடுக்கவோ, நிறைவேற்றவோ முன்வராதவர்கள் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய வேதாளம் கதை சொல்ல விழைகிறார்கள். வேறுசிலர் பிறர் குறை கூறி தம்மைத் தக்க வைக்க முனைகிறார்கள்.

தமிழ் பகுதியில் எது நடந்தாலும் அது பயங்கரவாதம், கைது, விசாரணை சிறைவைப்பு, தாமே தமது சிங்களமொழியில் எழுதிய குற்றப் பத்திரத்தில் கையொப்பமிட்ட குற்றத்திற்காக சிறையிருப்போர் பற்றி நடைபெறும் விசாரணைகள், பாகுபாடான முறையில் குரல் எழுப்பியவர்கள் இன்ற முதலைக் கண்ணீர் வடிப்பதைப் பார்த்து கேலிக்கூத்து என துன்புறுவோர் இதயம் கனக்கக் குமுறுகிறார்கள். ஓர் உதாரணம் சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் அவர்களின் கொலையும், விசாரணையும் , அதன் முடிவும் சாமத்தில் எடுத்த தீர்ப்பும், அதனைக் கொண்டாடியவர்களின் கூத்தும் இதுபோலவே அர்த்தமிழந்து சிறைகளில் வாடும் மக்களுக்காக எதுவித முன் முயற்சியிலும் ஈடுபடாத அரசியல்வாதிகள் இன்று தம்மிருப்பை தக்கவைக்க வீதிக்கு வரும்படி தமிழ்பிரதிநிதிகளைக் கேட்டு வந்தவர்களுக்கு நல்ல பதிலை பாராளுமன்ற உறுப்பினர் ஶ்ரீதரன் அவர்கள் வழங்கியது மிகப் பொருத்தமானது. அதில் கூட நாம் ஆதரவு வழங்கினால் மக்கள் தம்மைத் தள்ளி வைப்பார்கள் என்பதற்காக எனக் கூறியது தாமாக முன்னெடுத்தமை போதாமை என்பதனையே வெளிப்படுத்தியது. இதுபோன்ற முன் முயற்சிகள் குரல் கொடுப்புகளில் ஏனைய பெரும்பான்மையினரைஅழைத்து செயற்படுத்த முன் வராமை எமது சுயநலமேயொளிய மக்கள் தேவைகளுக்காக செயற்படுத்தக்கூடிய பலதளங்களை தவறவிட்டதை ஒருவராவது மனந்திறந்து வெளிப்படுத்தியது சிறப்பே.

மேலும் தனக்குத் தனக்கு என்றால் சுளகு படக்குப் படக்கு என்பதனையே இன்றைய அரசியல் சூழல் வெளிப்படுத்துகிறது. இதில் அரசியல் நாகரிகமின்மை யும், சுயபொறுப்பற்ற தன்மையும்மக்களின் வரிப்பணங்கள் பலகோடி ரூபாய்கள் தினமும் பாராளுமன்ற செயல்களின் அநாகரிகத்தால் செலவாக இருக்கிறது. இதனை தவிர்க்க எல்லா பாராளுமன்ற உறுப்பினரும் ஒருமாத கொடுப்பனவுகளை அரசுக்கு செலுத்துவதே மனசாட்சியுடைய செயல். இதனை செய்வார்களா? அல்லது இதற்கும் தமக்கு நிவாரணமாக ஏதும் வழி தேடுவார்களா? என்பது தான் சந்தேகமாக உள்ளது. இதில் நாம் ஈடுபடவில்லை என ஒதுங்கிக் குரல் கொடுப்போரும் இந்த அவச் செயல்களால் ஒரு கொலை நடந்தால் அதனை கண்டும் காணாதவர்களாக இருப்போரும் , அதன் உடந்தை ஆனவர்களே. இதற்கு செலவாகும் பணவிரயம் மக்கள் தலைமேல் இட்டு தமது வருவாயை பெரிதாக்கிக் கொண்டு தமது காடைத்தனத்தை, காட்டுமிராண்டியை காட்ட மட்டும் நாடாளுமன்ற பயன்படுத்தப் போகிறார்களா?

ரணில்விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம் ஆரம்பமே சறுக்கியது யாரும் அதனைக் கண்டும் காணாமல் பெரிதுபடுத்தாததாலேயே இத்தனை கறுப்பு ஆடுகளையும் கட்ட முடியாமல் போனது. முதல் கோணல் முற்றும் கோணலானது அர்ஜீண மகேந்திரனின் தில்லுமுல்லுக்கு முதல் துணை போன போதுதான். ஒரு பொறுப்புள்ளவரின் நியமனத்துக்கு வக்காலத்து வாங்கியது மட்டுமல்ல மீண்டும் அவரைப் பாதுகாக்க முனைந்தது. ஒருசிறுகுற்றம் செய்தவரையே 14 நாட்கள் விசாரணையில் வைக்கும் சட்டம் பிணைவிடுதலை எல்லாம் தாண்டி வெளிநாடு செல்ல கூறிய காரணம் திருமணவீட்டிற்குச் சென்றுள்ளார் வருவார் வருவார் என்ற வாக்குறுதிகளும் அதன்பின் அவரை கைதியாக கைது செய்ய போதிய முயற்சிகளும் இதுவரை எடுக்காது விடைகாண முடியாத புதிராக இருப்பதை அர்ஜீண இவருக்கு கொடுத்த பலமானது பதவிக்கான முற்றாக அமைந்தது. இதுவே ஒரு சாதாரண தமிழராய் இருந்தால் எத்தனை குழுக்கள் விசாரணைகள், பயங்கரவாத சட்டங்கள் எனப் பாய்ந்திருக்கும். இதை விட நம் நாட்டில் துப்பாக்கிச் சூடுகள் பல சாதாரணமாக அரங்கேறுகிறதே. மக்களுக்காக சிறை சென்ற தியாகிகளா இவர்கள்?

இன்றைய நாடாளுமன்ற உறுப்பினர்களில் எத்தனைபேர் மக்களுக்காக சிறை சென்ற செம்மல்களாக இருக்கின்றார்கள். காந்தி, நேரு, நெல்சன் மண்டேலா, தந்தை செல்வா இவற்றோடு செல்லும் பட்டியலில் சேரக்கூடிய எமது நாட்டுத் தலைவர்கள் யாருளர்?

இவர்கள் குற்றவாளிகளாக சாதனை படைத்தவர்கள் யாரென வெளிப்படுத்துவார்ளா? எமது மக்கள் பிரதிநிதிகள் மேல் உள்ள வழக்குகள் சிறை சென்ற விசாரணைகளை விளக்கப்படுத்திப் பார்த்தால் பல கைதிகள் செல்வாக்குப் பலத்தால் வெளியில் நடமாடுகின்றார்கள். ஒருவருக்குப் பல குற்றச் செயல் என்றால் தான் நாடாளுமன்ற மக்கள் பிரதிநிதியாக செல்ல முடியுமா?

முன்னைய கால கட்டத்தில் சிறுதொகைப்பணம் குற்றவாளியானாலே சமூகத்தில் மதிப்பிழந்தவராக் கணிக்கப்படுவர். இன்று குற்றவாளிகளே பெரும் பதவியாளருக்கு வழிகாட்டியாக, எங்கள் மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவாகின்றார்கள். இவர்களிடம் பரிசுபெறும் பேரறிஞர்கள் நிலை.

கட்சி மாறும் கலாசாரம் எமது நாட்டில் திறந்த வியாபாரமாக முன்னூறு லட்சம் என நிர்ணயிக்கப் பட்டதை ஜனாதிபதியே பதிவாக்கினார். இந்த சந்தையை உருவாக்கி பேரம்பேசி மந்திரிப்பதவிகள் பெற்றவர்கள் மாற்றுக் கட்சியிலிருந்தவர்களாக வர இப்பணங்கள் அறிவிட எத்தனை ஒப்பந்தங்களில் லஞ்சம் பெறவேண்டும்?, யாருடைய பணம் கைமாறுகிறது? இதை தேட முடியாத லஞ்ச பாரிய செயல்கள் பதவிப்பரிமாற்றங்கள் அரங்கேறுவது கூட இரவுகளில் என்றால் பகலில் செயல்படுத்த ஆசீர் பெற மாறியவர்களுக்கு மந்திரிப்பதவி, கட்சியில் முன்னிருப்பவர்களுக்கு என்ன எதிர்பார்ப்பு இருக்கும் இன்று கிரிக்கெட் சூதாட்டம் விளையாட்டு உலக மன நிலை குழப்பும். ஆனால் இச்சூதாட்டம் எமது நல்லாட்சி நாட்டின் எதிர்காலத்தையே சூனியமாகி விடும் அல்லவா? யார் இருக்க முன் நிற்பார்கள்? மக்களே வெள்ளைசட்டை போட்டவரெல்லாம் சட்டம்பிகள் அல்ல. மாறுவேடம் பூண்ட கொள்ளையர்களாகவும் வருவார்கள் கவனம்.

யாழ் களரி
Website: yarlgallery.com E-Mail: yarlgallery@gmail.com
Tel/Whats App/Viber: 077 6510375
பிரதம ஆசிரியர்: ஜோர்ச் ஜெஸ்ரின் |
பொறுப்பாசிரியர்கள்: வே.சஞ்சீவதனுசன் | செ.யோசப்பாலா
வெளியீடு மற்றும் தொடர்பு முகவரி: ராகஸ்வரம் கலைமன்றம் |
இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையம்
28/1 A.V வீதி. கொழும்புத்துறை.
யாழ்ப்பாணம்.

# உலகை மாற்ற எம்மால் முடியும்

உலகை மாற்ற முடியுமா? என்று சிந்தித்துப் பார்கிறவர்கள் பலர் இருக்கின்றார்கள். ஆனால் இந்த உலகை மாற்ற முடியும் என்று நம்பிக்கை கொள்பவர்கள் மிகச்சிலரே. அத்தகைய நம்பிக்கையுள்ள சிலரால் தான் இந்த உலகம் இன்னும் நன்றாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. புதிதாய் இனிதாய் மாறிக் கொண்டும் இருக்கின்றது. மாற்றங்கள், அதிசயங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றபோதும் உலகின் பாதுகாப்பு கேள்விக்குறியாகவும், அடுத்த கணங்கள் நிச்சயமற்றதாகவும் மாறி வருவது மனவேதனை தரும் விடயமாகும்.

குறிப்பாக இலங்கையில் நடைபெறுகின்ற திடீர் மாற்றங்கள் தீர்மானிக்க முடியாத குழப்பங்களுக்கு உள்ளாவதுடன் உலக அழிவிற்கான கட்டியம் கூறலாகவும் காணப்படுகின்றது. இயற்கை வளம்மிக்க எமது இலங்கையை தமக்குச் சாதகமாக்க சில வல்லரசுகள் தீட்டும் சதிவலைகளே நடைபெறுகின்ற குழப்பங்களுக்கு மூலகாரணமாகும்.

கொடிய யுத்தத்தின் காரணமாக பல்லாயிரக் கணக்கான மக்கள் ஆண்டுதோறும் மடிந்து கொண்டிருக்கின் றார்கள். வளி மண்டலத்தில் நச்சுவாயுவின் பரம்பல் அதிகரித்து வருகின்றது. நிலம் மற்றும் நீர்ச்சூழல் மாசடைந்து வருகின்றது. மரங்கள் வெட்டப்படுகின்றது. மழையில்லாமல் போகிறது. சட்டவிரோத மண் அகழ்வுகளால் கடல்நீர் கிராமங்களுக்குள் பரவும் அபாயமும் தோன்றியுள்ளது.

நன்னீர் நிலைகள் வற்றிப் போகின்றது. வறட்சியால் மனிதர்களும் மிருகங்களும் நீருக்காய் காத்திருக்கும் துர்ப்பாக்கியமும் சில இடங்களில் காணப்படுகின்றது.

ஓசோன்படலம் மிகவேகமாக அழிந்துவருகின்றது. பொலித்தீன் பாவனை, நச்சு வாயுக்கள், இரசாயனப் பாவனை போன்றவற்றால் சூழல் நஞ்சாகி வருகிறது. இவற்றின் விளைவாக மனித குலத்தினுடைய ஆயுள் குறைந்து வருகின்றது. போட்டிகளும், பொறாமைகளும் பல்வேறு துறை களில் மேலோங்கியிருக்கின்றது.

வளர்ந்த நாடுகளெல்லாம் வளர்முக நாடுகளையும், வறிய நாடுகளையும் சுரண்டிப் பிழைப்பதையும், யுத்த அச்சுறுத்தலின் பேரில் சிறிய நாடுகளில் வளர்ச்சியில் வளர்ச்சி யிலே தடையை ஏற்படுத்துவதுமாக இன்று உலகம் தத்தளித்துக் கொண்டிருக்கின்றது.

இதிலே நாம் என்ன பங்களிப்புச் செய்து கொண்டி ருக்கின்றோம். இவற்றை நல்லவிதமாக மாற்றுவதற்கு எமது பங்களிப்புச் செய்ய முடியாதா என்று நாம் அனைவருமே சிந்தித்துப் பார்க்க வேண்டும். நிச்சயமாக நாம் ஒவ்வொருவரும் எமது குறைந்த பட்ச பங்களிப்பை செய்தாலே போதும்.

உவகத்தை சாதகமாக மாற்றிடமுடியும்
நாம் இந்த உலகத்தை மாற்ற முடியும்

நாம் இந்த உலகத்திலுள்ள நல்ல விடயங்களை வெளிக்கொணர முடியும் நல்லவற்றை உலகுக்கு காட்டிக் கொடுக்க, சொல்லிக் கொடுக்க முடியும். பல்லாயிரக் கணக்கான நல்ல விடயங்கள் இருக்கின்றது, அவற்றை இவ்வுலகிலே அறிமுகம் செய்தாலே போதும். இவ்வுலக மாற்றத்திற்கு வித்திட்டவர்களாக நாங்கள் ஆகிவிடுவோம்.

ஒருமரத்தை நடுகின்றபோது அது முதலில் எமக்கும் பிறகு சூழலுக்கும் பயனுள்ளதாக மாற்றம் பெறுகின்றது. இதனால் மனித குலத்திற்கே நன்மை தருவதாக மாற்றமடைந்து விடுகிறது. நாமெல்லோரும் எமது வீடுகளை சுத்தமாக வைத்திருந்தால் நுளம்புகளால் ஏற்படும் தொல்லைகள் இல்லாமல் போகும். இவ்வாறு ஏராளமான விடயங்கள் நம்மால் செய்யக்கூடியதாக இருக்கின்றது. அதற்கான ஆற்றலும் எம்மிடமுண்டு என்பதை நம்புபவர்கள் நீங்கள் ஏதாவது ஒரு சிறிய செயலையாவது செய்யத் தொடங்குங்கள்.

சமூக அர்ப்பணிப்புகள் ஒரு சிலரால் தான் இவ்வுலகம் இன்னும் நலமாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. இவர்கள் எண்ணிக்கையில் சிறியவர்கள் தான். ஆனால் எண்ணங்களால் உயர்ந்தவர்கள். ஆகவே எமது நல்லெண் ணங்களால் இந்த உலகைத் தொடர்ந்தும் இயங்கச் செய்ய முனைவோமாக. இத்தகைய நற்பணிகள் செய்ய விரும்புவோர் யாழ்களரியுடன் இணையுங்கள். பல்சமயக் கருத்தாடல் செய்வோம். பலவிதமான பணிகளில் ஈடுபடுவோம்.

# விடுதலைக்குப் போராடும் ஈழத்துத் தமிழ்மக்கள் 6

## உரிமை கேட்கும் உரிமை அற்ற தமிழர்கள் -10

பரமபுத்திரன்

இனி விடுதலை அமைப்புகள் தொடர்பாக எண்ணுவோம்.

விடுதலை அமைப்புகளை பொறுத்தவரை அவை பலமுள்ளவையாக தோன்றினவோ இல்லையோ பல்கிப்பெரிகின. ஏறத்தாழ முப்பத்து மூன்று விடுதலை அமைப்புகளுக்கு மேல் பட்டியலிடப்பட்டன. உண்மையில் இது அன்றே ஆரம்பித்துவிட்ட விடுதலை போராட்ட சிதைப்பு நடவடிக்கை என்றே சொல்லமுடியும். காரணம் ஒரே வலுவான அமைப்பு என்றால் அந்த அமைப்பு தெளிவான சரியான பாதையில் சென்று இலக்கினை அடையும் வாய்ப்பு உண்டு. எனவே இதனை குழப்பும் நடவடிக்கையாக பல்வேறு இயக்கங்கள் தோன்றின என்றே சொல்லமுடியும். இந்தியாதான் ஈழ தமிழ் மக்கள் வாழ, அவர்களின் உரிமைகளை வென்றெடுக்க அமைப்புகளுக்கு பயிற்சி கொடுத்து போராட்டத்துக்கு வித்திட்டது என்றால்இ ஏன் ஒரு இயக்கத்தை மட்டும் உருவாக்கி, அவர்களுக்கு மட்டும் பயிற்சி கொடுத்து, உறுதியுள்ளவர்களாக மாற்றி அனுப்பவில்லை. அநேகமாக வலுவான என்று சொல்லப்பட்ட எல்லா இயக்கங்களும் இந்தியாவினை அடித்தளமாக கொண்டுதான் வளர்ந்தது எனின் ஏன் இயக்கங்கள் பல்கிப்பெருகும் நிலை வந்தது. இன்று இயக்கங்கள் தொடர்பாக கதைகதையாக சொல்பவர்களஇ அன்று நாம் எல்லோரும் ஒரே நோக்கில் செல்பவர்கள் ஏன் வேறுபட்டு நிற்கவேண்டும் என்ற கேள்விகளை எழுப்பவில்லை.

விடுதலை அமைப்பு தொடர்பாக பலருக்கு தெரிந்த உண்மைகள் உண்டு. அதேவேளை தெரியாத உண்மைகளும் உண்டு. பல கட்டுக்கதைகளும் உண்டு. போராடவென இயக்கம் ஒன்றை உருவாக்கி அதற்காக ஈழ மண்ணில் இருந்து பிள்ளைகளை அழைத்துச் சென்று, உணவுகூட கொடுக்க முடியாத பரிதாபநிலைக்கு உள்ளாக்கி, இறந்த பிள்ளைகளும் உண்டு, தமிழ் ஈழ விடுதலைப்புலிகள், தமிழ் ஈழ விடுதலை இயக்கம் ஆகிய இயக்கங்களால் மீட்கப்பட்டு அந்த இயக்கங்களில் இணைக்கப்பட்டவர்களும் உண்டு. மீண்டும் நாட்டில் கொண்டுவந்து விடப்பட்டவர்களும் உண்டு. அப்படியான செயல்களை செய்தவர்கள் இன்றும் உள்ளார்கள். இவ்வாறு இன்னும் பல சொல்லமுடியும். இக்கதைகளை நான் எழுதுவதற்கு காரணம் இந்தியாதான் எங்களை வாழவைக்கும் என்று சொல்வோர், உண்மையாக சொல்கின்றார்களா?.இவை தெரிந்துதான் சொல்கின்றார்களா அல்லது எங்களை முட்டாள்கள் ஆக்குகின்றார்களா?. இன்னுமொரு செய்தியையும் சொல்ல விரும்புகின்றேன். இது நான் வானொலியில் கேட்டது. காலம் திகதி சரியாக சொல்லமுடியவில்லை. ஆனால் நிகழ்ச்சியின் பெயரையும் மறந்துவிட்டேன். உண்மையில் தமிழீழ விடுதலைப்போராட்டம் தமிழ் மக்களுக்கு விடிவு தேட ஆரம்பித்தது என்று சொன்னாலும், காலப்போக்கில் அது ஒருவரை ஒருவர் இழிவு பேசுதல்,பழித்தல்,சொல்லிச்சிரித்தல்,காட்டிக்கொடுத்தல் என்ற நகைச்சுவை நிலைக்கும் ஆளானது. அதேபோன்று வானொலியிலும் செய்திகள் சொல்லப்பட்டது. அப்படியான ஒரு நிகழ்ச்சியில் கேட்டது. அது கொழும்பில் இருந்து ஒளிபரப்பாகும் நிகழ்வு. அன்றைய நாள்களில் தமிழ் மக்களின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தியாவில் சென்று அன்றைய முக்கிய உறுப்பினர்கள் யாரையோ சந்திக்கின்றார்கள். அப்பச்சந்திக்கும்போது பேசப்பட்டதாக ஒருவர் மற்றவர்க்கு சொல்வார். "இலங்கையும் இந்தியாவும் கிறிக்கற் விளையாடினால் நாங்கள் இந்தியாவுக்குத்தான் சப்போர்ட் பண்ணுவம்" என்று சிவசிதம்பரம் கூறியதாக பெரிய ஆளை சந்தித்து சின்னப்பிள்ளை கதை பேசியதாக சொல்லி சிரித்தார்கள். உண்மையில் தமிழர்களின் நிலை இதுதான். எதையும் புரியாமல் எல்லோரையும் நம்பிக்கொண்டிருப்பது. மக்கள் அரசின் நெருக்குதல்களுக்கு முகம் கொடுத்து தவித்த வேளையில் இயக்கங்கள் மக்கள் மத்தியில் நடமாட ஆரம்பித்தன. தனித்தனியாக ஒவ்வொரு இயக்கமாக நான் விபரிக்கபோவதில்லை. சில செய்திகளை மட்டும் சொல்லி நகர விரும்புகின்றேன். இயக்கங்களின் வரவு காவல் துறையின் கட்டுப்பாடற்ற செயல்களை கட்டுப்படுத்தியதால் மக்கள் தமிழீழ இயக்கங்களை ஆதரிக்க தலைப்பட்டனர். உதாரணமாக சொல்வதானால் அன்றைய காலத்தில் காவல்துறைக்கான காக்கி காற்சட்டையும், வெண்ணிற உள் பெனியனையும் மட்டும் போட்டபடி,ஈருளியில் வரும் காவல் துறைக்கே மக்கள் பயந்து நடுங்குவர். அவர் கடமையில் இல்லாதிருந்தாலும், வீதியிலோ அல்லது தாம் நிற்கும் இடத்திலோ அதிகாரம் செய்யும் வலு அவர்களுக்கு இருந்தது. அவர்கள் சொல்வதை வேதவாக்காக எடுக்கவேண்டும் இல்லாவிடில் தனியாக ஒருவர் அல்லது கூட்டாக பலர் வந்து அடி,உதை, என்பவை மட்டுமன்றி காவல் நிலையம் வரை கூட்டிச்சென்று அங்குள்ளவர்கள் எல்லோரும் அடிப்பார்கள். இது வெறும் கதை அல்ல, நானும் அனுபவித்திருக்கின்றேன். அதேவேளை உள்ளே செல்வாக்கிருந்தால் இராச மதிப்பும் கிடைக்கும். காவல்துறை என்னும் போது சிங்களவர்கள்தான் காரணம் என்று சொல்லமுடியாது. தமிழ் காவல்துறையினர் தான் அதிகமான பாதிப்புகளை மக்களுக்கு செய்வார்கள். காவல்துறையிடம் பட்ட துன்பம் தொடர்பாக தெளிவான செய்திகளையும், செல்வாக்கு உள்ளவர்கள் பெறக்கூடிய நன்மைகளையும் அகாலம் நூலில் புஷ்பராணி அவர்கள் எழுதி உள்ளார்.

( தொடரும்)

# மனித அவதாரத்தின் புனிதம் காண...

செ.யோசப்பாலா
உளசமூகசீராளன்



எல்லா உயிர்களிலும் உன்னத உயிர்ப்பிறப்பு மனித அவதாரமே. இப்பிறப்பை எடுத்த நாம் ஒவ்வொருவரும் எமது பிறப்பின் அர்த்தத்தை அதன் உயர்வை வெளிப்படுத்தப் பலரது வாழ்வு முன்னுதாரணமாக வெளிப்படுத்தப்படும் போது அதில் ஒருவராக எமது வாழ்வை இணைத்துக் கொள்ள நாம் எமது பிறப்பின் அவதாரப் புனிதத்தை எப்படிப் பதிவாக்குகின்றோம். அந்த வாழ்வுக்கான முயற்சியில் முன்னேற நாம் எமது எல்லைகளை அடைய ஏற்படும் சவால்கள், சந்தர்ப்பங்கள் எவையென மீட்டுப் பார்க்க கிறிஸ்து பிறப்பின் இக்காலம் எம்மையழைக்கின்றது.

கிறிஸ்து பிறப்பு எமது வாழ்வுக்கு மகிழ்வைத் தருகின்றது என்றால் அவரது அவதாரம் உலகிற்கே நம்பிக்கை ஒளியாக அன்பின் அடையாளமாக வெளிப்படுத்தி வருவதற்கு அவரது மனிதப்பிறவிளே எமக்குப் பெருமைதரும். இந்நாட்களை இன்று பல ஆயிரம் ஆண்டுகள் கடந்தும் கொண்டாடப்படும் கிறிஸ்து பிறப்பின் நிகழ்வுகளில் நாமும் இணைந்து மகிழ, இந்த மகிழ்வை எதிர்கால சந்ததியினருக்கு நினைவு கூர எமது வாழ்வு என்ன பங்கினை செயற்படுத்தலாம். நாமே ஓர் முன்மாதிரியான செயல்களில் ஈடுபடமுடியும் என சாதிக்கப்பிறந்த மனிதப் பிறப்பை சாதனையாளராக நாம் மாற புதிய அவதாரமாக எமது வாழ்வை மாற்றக் கிடைத்த அழைப்பாக்கி வெளிப்படுத்துவதே இவ்விழாக்கால சிறப்பாகும்.

பால இயேசுவின் பிறப்பு எம்மை மகிழ்விப்பதற்கு அவரது இளமைக்கால செயல்களே காரணமானது. பிறப்பும், வாழ்வும் இயேசுவின் வாழ்வில் சவால்கள் நிறைந்தவையே. அதனை எதிர் கொண்டு வெல்ல அவரது பிறப்பு முதல் வாழ்வின் ஒவ்வொரு அசைவிலும் பெற்றோரின் அர்ப்பண வாழ்வும் முன்னுதாரணமான பல்வேறு நிலைகளில் பங்கேற்றதாலே தான் திருக்குடும்பமாக போற்றப்படும் நிலைக்கு உயர்த்தப்பட்டதை வரலாறு பதிவாகியது.

ஒரு மனிதனின் பிறப்பினை அர்த்தம் காணவைப்பது வாழும்போது வாழும் வாழ்வை புனிதமாக்கிக் கொள்ளக் கிடைத்த அழைப்பினை நாம் எப்படி வெளிப்படுத்துகின்றோம். ஒவ்வொரு செயலும் எமது வாழ்வின் அர்த்தத்தை வெளிப்படுத்தும் நிகழ்வுகளே.

"உயர்ந்த நெறியில் வாழ்ந்த வாழ்க்கையை ஆண்டுகளால் அளவிடக்கூடாது. ஆற்றிய செயல்களால் தான்" என்பர் ரிச்சாட் ஷெரில்டன் என்ற அறிஞன்.

இயேசுக்கிறிஸ்துவின் அவதாரம் மண்ணில் நினைவுகளால் நிறைந்திருப்பதால் நாம் எல்லோரும் மகிழ்வடைகின்றோம் என்றால் அவரது வாழ்வும் இளமைப்பருவ செயல்களுமே வரலாற்றின் உயர்வை வெளிப்டுத்தியது. எமது வாழ்விலும் இளமையின் உலகை சுவைக்க கிட்டும் காலத்தின் தவறான வாழ்வுக்கு அழைக்கப் பலரும் இருப்பார்கள் . அவர்களில் சிக்கி வாழாது வாழும் வாழ்வை அர்த்தமுள்ளதான செயல்களால் உங்கள் வாழ்வைப் பதிவாக்கக் கிடைத்த ஒன்று கூடல் சந்தர்ப்பங்களை சாதகமாக்கி கொள்ளக் கிடைக்கும் அழைப்புக்களை தவறவிடாதே இன்றிலிருந்து வாழ்வை மாற்றினால் இதுவே புதிய பிறப்பாகும்.

எங்கே உன் இருப்பை நற்செயல்களால் பதிவாக்கி கொள்கிறாயோ எங்கே கிறிஸ்துவின் சாயலில் பிரசன்னமாகி அன்பின் அவதார புருசராக உன் வாழ்வைப் பதிவாக்கி கொள்கிறாயோ அதனை " இந்த நிமிடம் இனிதே செயற்படு காலம் உள்ளளவும் நிலைத்து நிற்கும் நற்செயலை நீ செய்தவன் ஆகிறாய்" என்ற ஜொகான் லேவோட்டன்" என்ற பேரறிஞனின் கூற்று பொய்க்காது.

கிறிஸ்து பிறப்பின் கொண்டாட்டங்கள் நிரந்தர மகிழ்வைத் தர பிறரது வாழ்விலும் ஒளியை மகிழ்வை ஏற்படுத்த உனது செயல்கள் உமது குடும்பத்திற்கும் மகிழ்வு ஏற்படும்போது அதுவே புதிய பிறப்பின் அடையாளமாகும். இதனை தாமஸ் ஏகெம்பிஸ் என்ற அறிஞன் " உன் வல்லமைக்கு எட்டியதைச் செய் உன் உத்தம நோக்கத்திலே இறைவன் உதவி புரிவான்" என்பார். ஒளிவிழாக்களின் ஒளியாக ஒவ்வொரு இளைஞனும் ஒளியேற்றும் நாளே உண்மையான மகிழ்ச்சி நாளாகும்.

**ஏற்று ஒளியை மாற்று உலகை.**

























சிறுவர் மனப்பதிவுகள்

## கவி நி[illegible]ம்

(கவிதைகதை)

## மது மாது மதன்

மதனவன் உழைத்த பணம் தினம் விரயம் !
கண்கள் சிவப்பேறி, கால்கள் தடுமாறி,
ஒருவாறு வீடு வந்து சேர்ந்தான் !
பசிமயக்கத்தில் பிள்ளைகள் நித்திரை கொள்ள
எழுப்பியடித்தானே !
பதறிய தாயுள்ளம் – அது
சிதறி நிலை கண்டே அழுது புலம்பியதே !

ஏனடி அழுகிறாய் என்நிலையறிந்த மகிழ்வாலா !
போடடி சாப்பாட்டை என்றே எட்டி உதைத்தான்
வாவெனடி நீ பேசாமல் நிற்கின்றாய்
சொல்லடி நீ நான் பெரிசா? அவை பெரிசா?
என்றே கேட்டு மீண்டும் அடித்தான் !
அம்மாடியோய் கட்டியணைத்த கரம் விலக
நிறுத்துங்கள் என்றே அழுது நின்ற
மூத்த பிள்ளை கூறியது!

பசிபோட்டு, பட்டினி போட்டு தினம்
வாட்டுகிறீர்களே எங்களை
குடித்துவிட்டு பணமதை வீணாக்கி
மனமதைக் கொல்கிறீர்களே – ம்ஹும்
இனியும் பொறுக்க முடியாது
குடிகுடித்து குடி கெடுக்கும் தகப்பன் கூடாது
கூடவே கூடாது !

குடும்பத்தில் பற்றில்லா தகப்பன்
வேண்டவே வேண்டாம் இனியெமக்கு
கோயில், குளம் செல்வதில்லை
நன்மை, தீமை தெரிவதில்லை
பாழாய்ப்போன அந்த மடம் மட்டுமே தஞ்சம்
ஒருபோதும் இனி வேண்டாம் அம்மா –இவர்
நரகவாழ்வு போதும் என்றே வெளியேறினவே
அவ்வுயிர்கள் !

### பூவிலங்கு

இருமனம் கலந்து
ஒரு மணமாக
இணைந்து இன்பம்
காண்பதே திருமணம்!

இனிக்கும் போது விடிவு
கசக்கும் போது முடிவு
காணும்போது விஸ்வரூபம்
தரும் பல அவஸ்தைகள் !

செல்லும் பாதை
கல்லும் முள்ளும் அள்ள
தடுக்கி விழுவோர் தாராளம்
தண்டனை பெறுவோர் ஏராளம் !

பணத்துக்காய் பணிந்த
அயோக்கியம் உறைக்க
காதலக்காய் முடித்த
முட்டாள்தனம் முறைக்கிறது !

அழகுடன் இலங்கி
மகிழ்வுடன் விளங்கி
தட்டுத்தடுமாறித் தவிக்கிறது
பூட்டிய பூவிலங்கு !

### ஒருமைப்பாடு

ஒற்றுமையைக் கருத்தாய்
பேணிக்கொள்!
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
உணர்ந்து கொள்!
ஒரு தலைப்பட்சம் பாராது
நடந்து கொள் !
நல்லது எப்பவும் நடக்கும்
அறிந்து கொள் !
இருவருக்கிடையில் பூசல் வரில்
நடுநிலை கொள்!
தீர்ப்பு செய்யும் வேளைதனில்
நல்ல நடுவராய் நடந்து கொள்!
நல்லார் உறவை நம்ப
விருப்பம் கொள் !
நவிலும் வாழ்வில் நன்மைகள்
சேர நாளும் தொழுதுகொள்!
பெரியோர் உள்ளம் நொந்துவிடாமல்
உதவிக்கொள் !
ஒற்றுமைக் கயிற்றை
உறுதியாய் பற்றிக்கொள் !
உற்றார் உறவை உதறி விடாது
உறுதி கொள் !
உண்மையாய் நடந்தே
அமைதி கொள் !
என்றும் பெறுவாய் வாழ்வில்
பெருமைகளைக் காண்பாய்
ஒற்றுமையதன் ஒருமைப்பாட்டை !

நசீரா அப்துல் அஸீஸ் கவிதைகள்

### இன்ப அதிர்ச்சி

நன்றியுடன்
இதயம் தேடும்
உறவுகள்
இன்முகத்துடன்
வரும்வேளை
அளவளாவும்
அந்தக் கணம்
இன்ப அதிர்ச்சியே!....

கல்லும் கனிய
முள்ளும் மலராக
முகமன் கூறி
முகமலர்வதை
முகிழ்பதுவும்
இன்ப அதிர்ச்சியே!..

புரிந்து விட்ட
அன்பகங்கள்
ஒரு தாய் பிள்ளைகள்
என்றே தொடர்ந்திருக்கும்
நடப்பதுவும் இன்ப அதிர்ச்சியே!

"வேற்றுமையற்ற
ஒற்றுமையின்
பாசப்பிரதிபலிப்பு
வேரில் பழுத்த
பலாவாக நன்றி ! நன்றி !
அன்புக்கும் உண்டோ
அடைக்குந் தாழ்"

(3ம் பக்கத் தொடர்ச்சி)

## சமூக மேம்பாட்டில் ......

அமெரிக்க அதிபர் Richard Nixo ஆல் போரையே நிறுத்த வைத்தது. இது ஊடகத்தின் வலிமையை வெளிப் படுத்துவதாக அமைந்தது.. இதனை ஒவ்வொரு ஊடகவிய லாளரும் தம் பொறுப்புக்களை உணர்ந்து செயற்பட அழைப்பு விடுத்தார். கியூடெக் கரித்தாஸ் நிறுவன இயக்குனர் அருட்பணி இயூஜின் பிரான்சிஸ் அடிகளார்.

கியூடெக் கரித்தாஸ் சர்வமத சகவாழ்வு நிகழ்ச்சித் திட்டத்தினால் கியூடெக் கரித்தாஸ் மண்டபத்தில் நடாத்தப்பட்ட ஊடகவியலாளருக்கான விழிப்பூட்டல் கருத்தமர்வு. "**சமூகமேம்பாட்டில் ஊடகவியலாளரின் பங்கு**" என்னும் தலைப்பில் நடைபெற்ற நிகழ்வில் ஊடகவியலாளர்கள் சமூகத் தலைவர்கள் மத்தியில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

பல்வேறு ஊடகங்களிலும் பணியாற்றும் ஊடகவியலாளர்களும், சமூகத் தலைவர்களும் ஒன்றிணைந்து தமது கருத்துக்களைத் தனியாகவும், குழுவாகவும் முன் வைத்தனர். " சமூக மேம்பாட்டில் ஊடகவியலாளர்களின் பங்கு" என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றிய யாழ்பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவர் திரு.கே.ரி. கணேசலிங்கம் அவர்கள் உரையாற்றுகையில் இலத்திரனியல் ஊடகங்களில் மிகச்சிறப்பிடம் பெறுவது எழுத்தூடகமான பத்திரிகையின் செல்வாக்கு இன்றும் அதிக செல்வாக்கு மிக்கவையே.

அரசியல் குழப்பங்கள் எதுவாக இருந்தாலும் மக்களின் வழிகாட்டலால் சமூகஅரசியல்வாதிகளை விட ஆன்மீகவாதிகளின் பங்கு மிக முக்கியமானது. அரசியல் செய்திகள் மட்டும் சமூகத்தை நல்வழிப்படுத்தி விட முடியாது. சமூகப்பொறுப்பு மிக்க செய்திகளில் மக்கள் ஈடுபடவும்சமூக நன்னெறிகளை வழிகாட்டும் சர்வமத வழிகாட்டலும், ஆரோக்கிய சமூகத்தை கட்டியெழுப்பும் இதுவே சிறந்த ஊடகப் பங்களிப்பாகவும் காணமுடியும்.

சமூகமாற்றம் என்பது ஆன்மீகப் போதனைகள் மட்டுமல்ல செயல்களிலும் மக்கள் பங்களிக்கும் முயற்சிகளால் ஏற்படுத்த இன்ற சிறு குழுக்களாக சிறுசிறு சுய முயற்சிகளாக மனிதநேயத்தை வளர்க்கும் சர்வமதங்களின் போதனைகளில் உள்ளதை வாழ்வாக்கி வாழ வைப்பதனைத் தூண்டுவதில் ஊடகங்களின் பங்களிப்புக்கள் காலாகாலமாக முன்னிறுத்தி வருவதை இன்றும் சிலரது முயற்சிகள் வெளிப்படுத்துகின்றன.

பத்திரிகைக்கு எழுதுவோரும், வாசிப்போரும் குறைந்து வருவதில் கவலையடைவதை விட அதனை வாசிக்கத் தூண்டும் முயற்சிகளில் மக்களின் மனநிலைகளைத் தூண்டும் உண்மைத்தன்மையுடன் வெளிப்படுத்துதலே சமூக முன்னேற்றத்தின் ஊடகங்களின் பங்காக வேண்டும். ஊடகப்பணிகள் மக்கள் குரலாக மாற வேண்டும். இன்றும் மக்களை வழிகாட்டும் ஊடகங்களே காலையில் மக்கள் நகர்வதைத் தீர்மானிக்கும். செல்வாக்குச் செலுத்தும் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. ஊடகவியலாளர் தமது பணிகளை முன்னெடுக்கப் பல சவால்கள் உண்டு என்பதனையும் உணர முடியும். இதனைத் தாண்டித் தான் ஒரு பொறுப்பு மிக்கவர் என்ற மனநிலையில் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

ஒவ்வொரு பத்திரிகை ஊடகங்களும் அதன் தலைமைத்துவ எதிர்பார்ப்புடன் விற்பனை நோக்கைக் கொண்டதனாலும் சமூகப் பொறுப்பு ஒவ்வொரு ஊடகவியலாளருக்கும் உண்டு. ஊடக நிருபர்கள் உண்மைத்தன்மையை நேரில் சென்ற களத்தின் நிலைகளையும் மக்களின் தேவைகள், எதிர்பார்ப்புகள், சுரண்டல்கள் மட்டில் அக்கறையுடன் பணியாற்றும் ஊடகப் பணிகளையே எதிர்பார்க்கின்றார்கள். இதனைத் தூண்டும் சந்தர்ப்பமாக இன்று தமது பணிகளோடு சமூக மாற்றத்திற்காக ஈடுபடும் கிராமமட்ட சமூகத்தலைவர்கள் கருத்துப் பரிமாற்றம் வாசகர்களின் எதிர்பார்ப்புகளும், சுயமுயற்சிகள், இன மதநல்லுறவு தூண்டல்கள், பிற மத நல்லுறவை கிராம தரிசிப்பு அனுபவங்கள், வெளிநாட்டுப் பயணங்களில் ஏற்படும் ஏமாற்று நிலைகளுக்கான பாதுகாப்புப் பயணங்களுக்கான விழிப்பூட்டல் பணிகளை செயற்படுத்துவதுடன் ஊடகவியலாளர்களும் ஒன்று கூடி சந்தித்துக் கலந்துரையாட சமூக மாற்றத்தில் ஊடகவியலாளரின் பொறுப்புக்களை உணர தூண்ட வைத்தவை பாராட்டத்தக்கது. இவை தொடரப்பட வேண்டியது காலத்தின் நிலைகளை அறிய ஆரோக்கிய சமூகத்தின் உருவாக்கத்தில் ஊடகங்களின் பணிகளை மக்கள் மயப்படுத்துவதாக உள்ளது என்றார்.

மக்கள் கருத்துக்களை ஊடகவியலாளர்களுடன் பகிரக் கிடைத்த சந்தர்ப்பங்களாகவும் பத்திரிக்கை வாசிப்பினைத் தூண்டவும், தமது கிராம செய்திகளைப் பகிர வைக்கவும் ஊடக நல்லுறவுக்கு ஏற்படுத்திய சிறந்த சந்தர்ப்பமாக அமைந்ததை ஊடகவியலாளர்களும் கிராம மட்ட தலைவர்களும் தங்கள் அனுபவப் பகிர்வுகளால் வெளிப்படுத்தினர்.

இந்நிகழ்வில் யாழ்களரியின் 10வது இதழ் அறிமுகமும் சிறப்புற நடைபெற்றது மகிழ்வை ஊட்டியது.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

## நம்பிக்கையூட்டும் ....

யாழ்போதனா வைத்தியசாலை அதிகாரி திரு.வே.அல்பேட் யோசப், இளவாலை பொலிஸ் பொறுப்பதிகாரிதிரு.எஸ்.என்.சேனநாயக்கா ஆகியோர் கலந்து கொண்டனர். சிறப்புரையாற்றிய கலாபூஷணம் யோசப்பாலா அவர்கள் வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் செயல்திட்ட அறிக்கை விபரிப்புக்கள் மூலம் தமது ஒழுக்க விழுமியங்களையும், இளையோர் பொறுப்புக்களையும்,வெளிப்படைதன்மையினையும் வெளிப்படுத்தியதுடன் விழாக்களுக்கு அர்த்தமூட்டும்கல்வி மேம்பாட்டுக்கான பரிசில்கள், கலை வெளிப்பதடுகளில் ஒழுங்கமைவும், சிறந்த நிர்வாகத் திறனை வெளிப்படுத்துவதாகக் காண்கிறேன்.

இளையோரின் செயல்களில் உள்ள திறன் ஒரு குறிப்பிட்ட செயல்களுடன் முடிந்து விடுவதில்லை. நல்ல ஒழுக்கக் கட்டமைப்பும், நிர்வாகத் திட்டமிடலும் ஐந்தாண்டு வளர்ச்சியில் சிறந்த வெளிப்பாடுகள் யாவும் பல தலைவர்கள் கற்றுச் செயல்பட குறிப்பாக ஐந்து ஆண்டுகள் ஆட்சி செய்ய முடியாது தத்தளிக்கும் தலைமைகளுக்கும் கற்றுக் கொடுக்கக் கூடிய சிறந்த ஒழுங்கமைப்பை பெற்றுக் கொள்ளக் கூடியதாக வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் வளர்ச்சி ஏனைய நிர்வாகிகளுக்கு ஓர் எடுத்துக் காட்டாக அமைகிறது.

இச்சங்க வளர்ச்சி ஐந்து ஆண்டுகள் நிறைவு காண்பதுடன் அயற்கிராமங்கள் பலவற்றிலும் இளையோர்சங்கங்களை அமைத்து இது போன்று உருவாக்குவதிலும் வெற்றி கொள்ள அடுத்த ஆண்டுகள் வழி சமைப்பதே வளர்ச்சிப் பாதையில் முன்நகரவேண்டும் என வேண்டுகோள் விடுக்கிறேன் என்றார்.

கலைநிகழ்வுகள், வாணவேடிக்கைகள், நவீனநடன, நாடக, இசைநிகழ்ச்சியில் மக்கள் பங்களிப்பும் மக்களை மகிழ்ச்சியில் திளைக்க இளையோரின் ஒழுங்கமைப்பு அமைந்தது.

## அறிவில்லாதவன் பதில்கள்

அறிவில்லாதவன் பதில்கள்
28/1, ஏ.வி.வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

- அரவிந்தன் , அச்சுவேலி -

★ *மற்றவரின் நன்மதிப்பைப் பெறுவது எப்படி?*

நம்மனச்சாட்சியை நாமே மதிக்கும்படிக்கு நடந்து கொள்ள வேண்டும். கர்வத்தை விட்டு மற்றவருடன் அன்புடன் பழகி அவர்களுக்கு உதவி செய்து அடக்கத்துடனும், பண்புடனும் நாம் பழக ஆரம்பித்தோமானால் பிறரின் நன்மதிப்பு நம்மைத் தேடி வரும்.

- ஆன்திரேசா, வவுனியா -

★ *தவறுகளை ஏற்றுகொள்வது சரியா?*

எய்தவன் இருக்க அம்பை நோதல் என்பது போல் நம்முடைய தவறுகளை மறந்து கொண்டு மற்றவர் மீது குற்றம் சுமத்தி தப்பித்துக் கொள்ளக்கூடாது.

- செ.ஜெயந்த, கொழும்பு -

★ *தேவையில்லாத வாதம் தேவைதானா?*

வாக்குவாதங்கள் பயனுள்ளவிதமாக முடிந்ததாக சரித்திரமில்லை. மற்றவர் சொல்வதை எல்லாம் ஏற்றுக் கொள்ளத் தேவையுமில்லை. வாதத்தில் தோற்பதை கௌரவக் குறைச்சலாக எண்ணாமல் எதிரியின் கருத்தையும் கேட்க வேண்டும். வெற்றி பெற்றே ஆக வேண்டும் என்ற வேகம் பிறக்கும்போது நிதானம் குறைகிறது. நட்பும், உறவும் முறிந்து சண்டையாக உருவெடுக்கின்றது.
நீதிமன்றம்–பட்டிமன்றம் அங்கே மட்டும் தான் வாதங்கள் நிகழவேண்டும்.

- சிசாம், புதிய சோனகத்தெரு, யாழ்ப்பாணம் -

★ *அதிஸ்டமில்லாமல் கிடக்கு அறிவில்லாதவரே?*

அதிஸ்டம் என்பது உழைப்பு அல்லது முயற்றி. நம்மை நாமே அதிஸ்டசாலிகளாக இருக்கின்றோம் என்ற எந்த முயற்சியும் செய்யாமல் இருப்பவர்கள் உழைப்பில்லாமல் முன்னுக்கு வர முடியாது.எதையும் முன்கூட்டியே யோசித்தல், செயன்முறைகளில் திறமை, கடுமையான உழைப்பு ஆகியவையே வெற்றிக்குக் காரணம். அதிஸ்டம் தேடி வராது நாம் தான் தேடிக்கொள்ள வேண்டும்.

- ம.தங்கராசா, நாவற்குழி -

★ *அறுவை ஆசாமிகளிடம் மாட்டிக்கிட்டு கஸ்டப்படுகின்றேன் கதை என்ற பெயரில் வதைக்கிறார்கள் இதனால் தாமதமாக வீடு செல்வதால் வீட்டிலும் தர்மசங்டப்படுகிறேன் ஆலோசனை தாருங்கள்?*

உங்கள் கஸ்டங்களை எடுத்துக்கூறுங்கள் அவர்களிடம் பணஉதவி போன்ற பெரிய உதவியா கேளுங்கள் விடுதலை கிடைக்கும்.

*உங்கள் கேள்விகளை அனுப்புங்கள் இலவசமாக யாழ்களரி உங்கள் இல்லம் தேடி வரும் -யாழ்களரி-*

## நாகரிக லஞ்சம் நமதுநாட்டில்



கட்சி தாவும் மரபுகள் பல சந்தர்ப்பங்களில் எமது நாட்டில் ஏற்பட்டது என வரலாற்றுப் பதிவுகள் உண்டு. கூட்டமைப்பு, தமிழரசுக் கட்சியிலிருந்து மாறிய பலரது நிலைகள் இதற்கு சான்றாகும். இவை சிறிய தேர்தலில் இருந்து பொதுத்தேர்தல் வரை தொடர்கதைதான்.

மட்டுநகரில் சொல்லின் செல்வர் இராசதுரை, யாழ்.பா.உறுப்பினர் சி.எக்ஸ் மார்ட்டின், பொத்துவில் கனகரட்ணம் போன்றோர் வரிசையில் இன்று வியாளேந்திரன் மாறி கனவு மந்திரிப் பதவியைப் பெற்றவராகிறார்.

இதை விட பரீட்சையில் தோல்வியுற்றாலும் உயர்பதவிகள் பெற்று விடலாம் என்பதுபோல் கைலஞ்சம் பல வழிகளில் அரங்கேறும். இதுபோல தேர்தலில் தோற்று மக்கள் புறக்கணித்தாலும் அரசு லஞ்சமாக நியமனப் பதவி பெற்று அதன் மூலம் மந்திரிப்பதவி பெறுவது நாகரிக லஞ்சமாக அரங்கேறும் நம்ம நாட்டில் . இவை எமது நாட்டில் எந்தவித குற்றமா கவோ, அகௌரவமாகவோ பார்ப்பதில்லை இது கூட ஒரு குடும்பத்தில் திருமணம் முடித்து வேறொரு குடும்பத்தில் கூடி இணைந்து கொள்வது போன்ற நிலை தான்.

இன்று கட்சி மாறுவது மந்திப் பதவிகள் மட்டு மல்ல பலகோடி லஞ்சமாகப் பெறுவதும், மாற்றுக் கட்சிக் குள் இருந்து முன்னர் தெரிவு செய்யப்பட்ட மக்கள் கட்சிக் குள் எதிராக செயற்பட முனைவது கௌரவமாக்கிக் கொள்வது சேர்ந்த கட்சிக்குள் தன்னைப் பெருமைப் படுத்துவது, சில சமயங்களில் சமயம் பார்த்து சமயம் மாறுவது பலரது நிலை போலவே உள்ளது. இவை தற்போது எந்தக் கட்சியில் எந்த சின்னத்தை எடுத்து அடுத்துக் களமிறங்கி முகம் காட்டப்போகின்றார்கள் என்பது முகவரியிழந்த முகவர்களாக மாற இன்னும் பலருக்குச் சந்தர்ப்பங்கள் காத்திருக்கிறது. இது முன்னையோரின் வழிகாட்டல் வரலாற்றுப் பதிவுகள். முகவரி யிழந்த பதிவுகளின் சான்றாகும்.

# யாழ்ப்பாணப் பிரதேச செயலக கலாசார விழா 2018இல் "யாழ்ரத்னா" விருது பெற்றோர் மற்றும் கலைஞர்கள்



## கிறிஸ்தவ கற்கை நெறிகள் தொடர்பான முதலாவது சர்வதேச மாநாடு யாழ் பல்கலைகக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.



## இலங்கை கரித்தாஸ் நிறுவன ஐம்பதாவது ஆண்டு நிறைவு "பொன்விழா" பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது



இப்பத்திரிக்கை ஜோ.ஜெஸ்ரின் என்பவரால் காந்தள் புலம்பெயர் இளையோர் அனுசரணையில் சுன்னாகம் கே.கே.எஸ் வீதியிலுள்ள முத்து பிறின்டேர்ஸ் நிறுவனத்தில் 01.12.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பெற்றது